
கனி 10

2024 அக்டோபர்

# புதிய தேடல்

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்



இறந்தும் இதயங்களில் நீக்கமற வாழும்

100 வது பிறந்த நாள்

## வேர்களாய் கனிகளாய்

அருள்தந்தை. ஜேம்ஸ் தொம்பர்

ஆண்டு சந்தா : 130 தனிப்பிரதி : 10

# HOLY TRINITY INTERNATIONAL SCHOOL

A CAMBRIDGE KNOWLEDGE PARTNER SCHOOL

A Cambridge Knowledge Partner School



## 100% PASS WITH HIGH MARKS IN GRADES X & XII CBSE BOARD EXAMS.



**EVERY CHILD IS SPECIAL AND UNIQUE**

htis2014@gmail.com | htis.org.in

**04651 284 821, 8438 974 632**

Melpalai, Edaicode Post, K K Dist - 629152

# HOLY TRINITY COLLEGE OF EDUCATION

(Accredited by NAAC at 'B' Grade with a CGPA 2.81 on Four Point Scale)

**KNOWLEDGE AND SERVICE TO THE MANKIND**

## 2024-2025 ADMISSIONS GOING ON FOR B.Ed & M.Ed

**COURSES**

**B.Ed** (TWO YEARS)

**M.Ed** (TWO YEARS)

**SUBJECT**

- TAMIL
- ENGLISH
- MATHS
- PHYSICAL SCIENCE
- BIOLOGICAL SCIENCE
- COMPUTER SCIENCE
- SOCIAL SCIENCE & HISTORY
- COMMERCE

(B.E/B.TECH graduates are eligible to study B.Ed course)



**APPLICATION FORMS CAN BE AVAILED FROM THE COLLEGE OFFICE**

**9443 993 234 | 9486 952 036**

Email : htceducation2007@gmail.com | Web : htced.org.in

Melpalai, Edaicode Post, K K Dist - 629152



# ஆசிரியரின் அன்பு வரிகள்

அருள்பணி. முனைவர். **இரா.பால் ரிச்சார்டு ஜோசப்**

புதிய தேடலில் என்னோடு கைகோர்த்து பயணிக்கும் அன்பான வாசகர்களே,

பழம் பெரும் மரம், அது ஈன்ற கனி மரத்திலிருந்து உதிர்ந்து மண்ணில் வீழ்ந்தது. தன்னை ஈன்ற மரத்தைப் பார்த்து பிள்ளையான கனி கேட்டது அம்மா மரமே நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

தாய், மரம் சொன்னது குழந்தாய் மண்ணில் இணைந்து வேரூன்றி முளைத்து கனி தர வா, காரணம் வேரில்லாத மரம் நிலையற்றது கனியில்லாத மரம் பயனற்றது என்றது. மண்ணுக்குள் இருக்கும் விதை, நம் கண்ணுக்கு மறைவாய் உள்ளது.

மண்ணில் வேரூன்றும் விதை எவ்வளவு மண்ணுக்கு அடியில் வேரைப் பதிக்கின்றதோ அந்த அளவுக்கு வான் நோக்கி உயர்ந்து காய்ந்து கனிந்து பலன் கொடுக்கிறது. நீங்கள் கனிதரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை நான் ஏற்படுத்தினேன். (யோவா 15: 16)

ஆம்! நம் பாசத்திற்குரிய அருட்தந்தை ஜேம்ஸ் தொம்பர் அவர்கள் இறை நம்பிக்கையில் வேரூன்றி இறைபணியில் பூத்து, காய்ந்து, கனிந்து மனித நேயப் பணிகளில் பண்பாட்டுத் தளங்களில் நம்பிக்கை வாழ்வில் நல்லெண்ண மற்றும் நல்லிணக்க சிந்தனையில் ஏழைகளின் உயர்வில் கல்வியின் சிறப்பில், முப்பது, அறுபது, நூறு மடங்காக (மத் 13: 23) நமது மண்ணையும் மறைமாவட்டத்தையும் மாண்புறச் செய்தவர் என்ற பெருமைக்குரியவர்.

இதுபோல நம்முடைய நம்பிக்கை வாழ்க்கை வேர்போல் ஆழங்களைத் தேடிச் செல்ல வேண்டும் என்பதையும் கனிபோல் உயர்ந்து கனிகொடுக்க வேண்டும் என்பதையும் நினைவூட்டுகின்றது. அவ்வாறே செயல்பட நம்மைத் தூண்டுகின்றது.

அவர் மண்ணில் மலர்ந்து நூறு ஆண்டை நிறைவு செய்யும் தருணத்தில், அவர் விட்டுச்சென்ற பணித்தடயங்களை, நம்பிக்கை வாழ்வை நம் உணர்விலும், மூச்சிலும், சிந்தனையிலும், செயல் பாட்டிலும், வாழ்வாக்குவதே நாம் அவருக்கு செலுத்தக்கூடிய நன்றிக்கடனாகும்.

தடம் பார்த்து வாழும் மனிதர் மத்தியில் தடம் பதித்து வாழ்ந்த நம் பாசத்துக்குரிய தந்தையின் வாழ்வை, இறைமகன் இயேசுவின் வழியில் சிந்தித்து நமதாக்குவோம். வேற்றுமையில் ஒற்றுமை, சமதர்ம சமுதாயம், நம்பிக்கையில் நட்புப்பாராட்டும் ஆன்மீகம், அன்பு உறவை வளர்க்கும் மனித நேயம், நேர்மறையாக பேசும் மனநிலை, பகைமையை விரட்டும் திறந்த மனம், மன்னித்து வாழும் மனநிலை இவைகளே, இறையாட்சி பணிக்கான தனது விருதுவாக்கு வேர்கள். இறையாட்சி மலர தந்தையைப்போல நாமும் வாழ்வை அர்ப்பணிப்போம்.


## புதிய தேடல்

*இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு*

*ஆசிரியர்*

அருள்பணி. முனைவர். **இரா.பால்ரிச்சார்டு ஜோசப்**

*ஆசிரியர் குழு*

அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)

அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)

திரு. **மு. அருளப்பன்** (துணைச் செயலர்)

அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)

அருள்பணி. **ஜாக்சன்**

அருள்பணி. முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**

அருள்பணி. **க. சுனில்**

திரு. **ஞா. எலியாசு**

திருமதி. **டி. மேரி விஜிலா**

திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)

*தொடர்பு முகவரி*

**புதிய தேடல்**

**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**

**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**

**அஞ்சல் எண் - 629 179**

**கைபேசி : 9443693505, 8525032383**

**மின் அஞ்சல்:**

**newputhiathedal@gmail.com**

| | | |
|---|---|---|
| **ஆண்டு சந்தா** | : | ` 130 |
| **ஆயுள் சந்தா** | : | ` 2000 |
| **தனிப்பிரதி** | : | ` 10 |



விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| **பலவண்ண அட்டை உள்பக்கம்** | : | ` 7000 |
| **பலவண்ண அட்டை வெளிப்பக்கம்** | : | ` 12000 |
| **முழுப்பக்கம் கறுப்பு** | : | ` 2000 |
| **அரைப்பக்கம் கறுப்பு** | : | ` 1000 |

கனி 10 அகல் 15 அக்டோபர் 2024


| எண் | படைப்பு |
|---|---|
| 1. | ஆசிரியரின் அன்பு வரிகள் |
| 2. | ஆயரின் அமுத மொழிகள் |
| 3. | அருள்பணி. ஜேம்ஸ் தொம்பரின் அடிச்சுவட்டில் பயணிப்போம்... |
| 4. | யார் இந்த அருட்பணியாளர் ஜேம்ஸ் தொம்பர் |
| 5. | கல்விக்கண் கொடுத்த ஜாக்குஸ் |
| 6. | மண்பாண்ட தொழிலாளர்கள் சுங்கான்கடை |
| 7. | பரக்குன்று பனைவெல்லக் கூட்டுறவு சங்கம் |
| 8. | போதையைத் தடுப்பதில் வேர்களாய் கனிகளாய் |
| 9. | எனது அனுபவங்களில் வெள்ளைக்கார சாமி |
| 10. | கடவுளின் கரங்களால் வழிநடத்தப்பட்ட ஓர் அருள்பணியாளர் |
| 12. | தேன் சிட்டுப்பதில்கள் |
| 13. | ஜேம்ஸ் தொம்பர் என்றொரு சமூக சிற்பி |
| 14. | தொம்பரின் கனவுகள் தொடரட்டும்! |
| 15. | பணிக்குழுக்களின் அறிக்கைகள் |




# ஆயரின் அமுத மொழிகள்

புதிய தேடலின் அன்பர்களே, அருள்தந்தை. ஜேம்ஸ் தொம்பர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அவரால் பூத்து, காய்ந்து, கனிந்து, பலன் பெற்ற நாம் நன்றியுணர்வோடு அவரையும் அவரது பணிகள் பற்றியும் இம்மலரில் சிந்திப்பதில் மனம் மகிழ்கின்றேன். இப்பணியை முன்னெடுத்த அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

“நீயே நற்செய்தியாக இருந்து அனைவருக்கும் நற்செய்தியை அறிவி” என்பதே அருள்தந்தை. ஜேம்ஸ் தொம்பரின் விருதுவாக்கு. 03.10.1950 அன்று கோட்டாறு மறைமாவட்டத்திற்கு தன்னை ஒரு அருட்பணியாளராக பணியாற்ற தன்னை அர்ப்பணித்தார்.

ஏற்றத்தாழ்வும், பிளவுப்பட்ட மனநிலைகளும் இம்மண்ணில் மலிந்து காணப்பட்டன. ஆடையில்லாததால் ஆலயத்திற்கும், கல்விகூடத்திற்கும் செல்ல இயலாதா நிலை. வறுமையும், அடிமைதனங்களும், அடக்குமுறைகளும், ஏழ்மையும், பொய்வழக்குகளும், அச்சமும் மக்கள் மத்தியல் மிகுந்து காணப்பட்டன. நற்செய்தியாக இருந்து நாடு விட்டு நம் நாடு வந்து நற்செய்தி பணியாற்றிய அருள்தந்தை. ஜேம்ஸ் தொம்பர் அவர்கள் தனி மனிதர் மட்டுமல்ல நாம் சார்ந்த சமூகமும் இறையாட்சியில் விடியல் காண வேண்டும் என்பதில் குறிக்கோளாக இருந்தார்.

நற்செய்தி மதிப்பீட்டின்படி எல்லோரும் சகோர சகோதரிகளே என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்த தந்தை அவர்கள் எல்லோருக்கும் எல்லாமாக செயல்பட்டார்.

முதன்முதலில் முழு நேர சமூக பணியாளராக ஒரு அருள்பணியாளரை மறைமாவட்டம் நியமிக்க தூண்டுதலாக இருந்தவர் அருள்தந்தை. ஜேம்ஸ் தொம்பர் ஆவார். இவரால் உருவாக்கப்பட்டது தான் கோட்டாறு சமூக சேவை சங்கம். இதனால் நம் மண்ணில் படிப்படியாக அடிமைதனங்கள் அகன்றன. வாழ்க்கைதரம் உயர்ந்தன. இந்திய பண்பாட்டில் வடிவமைக்கப்பட்ட ஆலயங்களும், நல்லெண்ண ஆன்மீக எழுச்சியும் வளர்ந்தன.

“சின்னஞ்சிறிய என் சகோதரர்களுக்கு செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்” (மத் 25: 45) என்ற இறைவார்த்தையை வாழ்வாக்கி ஏழையின் சிரிப்பில் இறைவனை கண்ட அருள்தந்தை. ஜேம்ஸ் தொம்பர், நம் அனைவருக்கும் கனிகளை தரும் மரமாக உயர்ந்து நிற்கின்றார். பிறர் அன்பில் மகிழ்ந்து பயணிப்போம். நன்றியுணர்வோடு வாழ்வோம். அன்போடு இறையாசீர்.

f[wp] J tpy cqfs mdGss›

NkjF MaH MygHI md ] jh ]›
FopjJ iw kiwkhtII MaH.



# அருள்தந்தை. **ஜேம்ஸ் தொம்பரின் அடிச்சுவட்டில் பயணிப்போம்...**

பேரருட்பணி. முனைவர். **சேவியர் பெனடிக்ட்** DCL
(மறைமாவட்ட முதன்மைப் பணியாளர், குழித்துறை மறைமாவட்டம்)

"நாம் மறைய வேண்டும் நம் பணிகள் தெரிய வேண்டும்" என்று செயல்படுகிறவர்களே சிறந்த தலைமைப் பண்புமிக்கவர்கள் என்பதை வாழ்ந்து காட்டி கோட்டாறு, குழித்துறை மறைமாவட்ட மக்களின் மனதில் தடம் பதித்தவர்தான் அருள்பணி ஜேம்ஸ் தொம்பர் அவர்கள்.

**பிறப்பு**

பெல்ஜியம் நாட்டில் பிரசல்ஸ் நகரில் 1924-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் நாள் அருள்தந்தை. ஜேம்ஸ் தொம்பர் பிறந்தார். இவரது இயற்பெயர் ஜாக்.

**இறை அழைப்பு**

ஆப்பிரிக்காவில் தூதுப்பணி செய்த மதபோதகரும் மருத்துவருமாகிய டாக்டர் ஷ்வெட்சர் செய்த பணியை தாமும் செய்ய வேண்டும் என்ற கனவோடு பள்ளிப் படிப்பை தொடர்ந்து, அருள்பணியாளராக வேண்டும் என்ற முனைப்போடு குருமடத்தில் இணைந்தார். 1949 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 17 ஆம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**குமரி வருகை**

நாடு, மொழி, இனம் கடந்து ஏழை எளிய மக்களுக்காக உழைக்க வேண்டும் என்ற முனைப்போடும், "ஏழையரின் உள்ளத்தோர் பேறுபேற்றோர்..." (மத் 5: 3) என்ற இறைவார்த்தையை மனதில் ஏற்று இவர் 1950 ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் நாள் குமரி மண்ணில் பாதம் பதித்தார்.

**இறையாட்சிப் பணிகள்**

இறைவன் நமக்குத் தந்த உயர்வும் சிறப்பும் பிறரிடமிருந்து நம்மை தனிமைப்படுத்தி உயர்வதற்காக அல்ல, மாறாக விளிம்பு நிலை மக்களின் உயர்வுக்காகவும் வளர்ச்சிக்காகவும் பணியாற்றுவதே இதுவே சிறந்தப்பணி என்பதை உணர்ந்து, அருள்பணி. ஜேம்ஸ் தொம்பர் அவர்கள் தொண்டாற்ற துவங்கினார்.

சாதிக் கொடுமைகளும் மத வெறுப்புகளும், அடிமைத்தனங்களும், வறுமையும், ஏழ்மையும், கல்லாமையும் மிகுந்து காணப்பட்ட மக்களை சந்தித்து உரையாடினார். அவர்களின் நிலை உணர்ந்து, வாழ்வில் முன்னேறும் வழிகளை காட்டினார்.

வழிபாட்டுத்தலங்கள், கல்விச்சாலைகள், சிறுதொழில் மையங்கள், அமைப்புகள், சேமிப்பு முறைகள், நலத்திட்டங்கள் போன்றவைகளை உருவாக்கி மக்களின் வாழ்வு மேன்மையடைய வழிவகைச் செய்தார்.

முளகுமூடு, பரக்குன்று, தோட்டச்சாணி, செறுவல்லூர், நல்லாயன்புரம், மேல்பாலை, இடைக்கோடு, தோமையார்புரம், கிறிஸ்துராஜபுரம், ஆகிய பகுதிகளில் பணியாளராக சுமார் 23 ஆண்டுகள் பணியாற்றி மக்களின் இதயம் தொடும் மனிதராக திகழ்ந்தார்.

**விண்ணுலக வாழ்வு**

வியத்தகு பணிகளை ஆற்றிய அருள்பணி. ஜேம்ஸ் தொம்பர் பார்க்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டு அக்டோபர் 10-ஆம் நாள் விண்ணுலக வாழ்வை அடைந்தார்.

**நிறைவாக**

எதில் பெயர் கிடைக்கும் என்று அதில் மட்டும் கவனம் செலுத்தி புகழ் பெறுபவர் நாளடைவில் மக்களின் நினைவிலிருந்து மறைந்து விடுவர். ஆனால் மக்களின் வாழ்வுக்காக தன்னையே முழுமையாக அர்ப்பணித்து "வேர்களைப் போல" மறைந்திருந்து வியர்வைச் சிந்தி உழைத்தவர்களை வரலாறு வாழ்த்துகிறது. அவர்கள் மீதே காலம் பன்னீர் தெளிக்கிறது என்பதை ஆளுமை மிக்க மாமனிதரான அருள்பணி. ஜேம்ஸ் தொம்பரின் வாழ்வும் பணியும் நினைவூட்டுகிறது.

நாமும் பிறருக்காக பணியாற்ற படைக்கப்பட்டு இப்பூமிக்கு அனுப்பப்பட்டுள்ளோம் என்பதை ஏற்று அருட்பணி. ஜேம்ஸ் தொம்பரின் அடிச்சுவட்டில் பயணிப்போம்.

# யார் இந்த அருட்பணியாளர் ஜேம்ஸ்தொம்பர்



**ஒலக்கோடு ஜாண்**

சில்லென்று வீசும் ஈரக்காற்று, விடாமல் சிரிக்கும் கடலலைகள், பாதம்பதிக்க ஆசைத்தூண்டும் பஞ்சு மெத்தை மணல், தாமுண்ட நீரை தலையாலேத்தரும் வளர்ந்து உயர்ந்த மரங்கள், வான்மேகத்தை தடுத்து நிறுத்தி மழையைப் பொழிய வைக்கும் உயர்ந்த பெரும் மலை முகடுகள், பஞ்சைக் கம்பளம் விரித்தாற் போல பரந்து விரிந்த வயல்வெளிகள், குறிஞ்சி, முல்லை, மருதம், சுமார் 60 கி.மீ மட்டுமே உடைய நெய்தல் என இயற்கை அன்னையின் ஒட்டுமொத்த குத்தகையை சுமந்து நிற்கும் இயற்கை எழில் கொஞ்சும் என்நாடு. வடக்கே நெதர்லாந்து, கிழக்கே ஜெர்மனி, தென்கிழக்கில் லக்சம்பர்க். தெற்கே பிரான்ஸ் ஆகியவற்றை எல்லைக் கோடுகளாகக் கொண்ட பெல்ஜியம் நாட்டில் பிரசல்ஸ் நகரில் திருமறை வழிநடந்து திருப்பணிச் செய்து வாழ்ந்த தம்பதிக்கு 1924-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் நாள் அருள் தவப்புதல்வனாய் வந்து பிறந்தார். இரண்டு சகோதர்களின் அன்பும், ஐந்து சகோதரிகளின் பாசமும் இவரை அகம் மகிழ, முகம் குளிரச் செய்தன.

இவர் பெற்றோருக்கு மகனாக மட்டும் பிறக்கவில்லை. இந்த பாருலகைச் செம்மைப் படுத்துவதற்காக வந்த இயேசுவின் பாதைகளை செம்மைப்படுத்துவதற்காக பிறந்தார். துள்ளிவிளையாடும் பள்ளிப்பருவம் முதல் ஏழைக்கு இரங்குவதே இறைத் தொண்டு என்னும் இயேசுவின் மறைமொழிகளை மனதில் கொண்டார். மொழிகளையும், கலைகளையும் இறை ஞானத்தையும் கற்றுத்தெளிந்தார். இவர் 1949-ம் ஆண்டு ஜுலை 17-ம் நாள் துணையாளர் சபையில் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். மானுடத்தை மனமாற்றம் செய்வதும் இயேசுவின் சிந்தனைகளை இம்மண்ணில் விதைப்பதையுமே குருத்துவத்தின் விருதுவாக்காய் செயல்வடிவமாய் கொண்டார்.

**குமரி தமிழ் மண்ணில் ஜேம்ஸ்தொம்பர்:**

பெல்ஜியம் மண்ணிலிருந்து இறை பணிக்காக மூட்டை முடிச்சிகளுடன் புறப்பட்ட இவர், காவிரியின் குளிர் காய்வதற்காக திருச்சி மாநகரிலேயே காலடி எடுத்து வைத்தார். அங்கே மூலைமுடுக்கெங்கும் அலைந்து திரிந்து தமிழ் மக்களின் வாழ்வின் யதார்த்தங்களைக் கண்ணாரக்கண்டார். தனது சபையின் அருள்தந்தை மோன்சனான் ஆலோசனையில் 1950 ஆம் ஆண்டு காந்திய தினத்தின் மறுநாளான அக்டோபர் 3-ம் நாள் அன்றைய திருவிதாங்கூர் - கொச்சி சமஸ்தான மண்ணில், கோட்டாறு மறைமண்ணில் இன்றைய குமரி மாவட்டத்தில் காலடி எடுத்துவைத்தார். ஒன்பது மாதங்களிலேயே தேன் தமிழின் சுவையைக் கற்றுத் தெளிந்தார்.

இங்கு காலப்புரட்சிக்கு இறையாட்சிப் பணியாகி குருத்துவப்பணியையும், கருத்துப் புரட்சிக்கு இறைஞானத்தையும் தமிழ் மொழியிலேயே அள்ளி வழங்கினார். ஒரு ஆணுடை தரித்த அன்னை தெரசாவாக, திருப்பலியில் கிடைத்த விண்ணக உணவின் மகத்துவத்தை மண்ணக வாழ்வின் மனுக்குலத்திற்கு தந்தார். கல்லாமையாலும், இல்லாமையாலும், மனுதர்ம கோட்பாட்டினாலும், குமுறிக் கொண்டிருந்தவர்களின் வாழ்வில் குறைகளைக் களைவதை இலட்சிய வாழ்வாகக் கொண்டார். மாதம் மும்மாரி மழைப் பொழிந்திட, ஆடிக்காற்றிலே அம்மியும் பறந்திட, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, குடிக்க நீரின்றி, படுக்க இடமின்றி, தவித்த ஏழை எளியோரின் வாழ்வுகளும், அன்றாடம் அவதியுற்ற நோயாளிகளின் வாழ்வின் வலிகளும் அவர் நெஞ்சத்தை அல்லோலப்படுத்தின. அன்று காலரா, வைசூரி நோய்கள் ஊரையே காலி செய்திட்டாலும் களத்தில் நின்று கலங்காமல் பணியாற்றினார்.

**நலத்திட்டங்கள்**

இதன் காரணமாக இவர் சிந்தையில் திட்டங்கள் பல உருவாகத்தொடங்கின. அவை தொழிற்பயிற்சி நிறுவனங்களாக, நூற்பு நெசவு மையங்களாக பரக்குன்றில் பனைவெல்ல சர்க்கரை மற்றும் பனைத்தும்பு ஆலைகளாக, பனைநார், பல்பொருள் செய்யும் நிறுவனங்களாக, பால் உற்பத்தி மையம் மற்றும் தாய் சேய் நலத்திட்டங்களாக, விவசாய சங்கங்கள் மற்றும் பனைத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களாக, கல்விக்கூடங்களாக உருமாற்றம் பெற்றன. தன் வாழ்க்கையை சக மனிதனுக்காக அர்பணித்தார். மனதில் எழுந்த நற்சிந்தனைகளுக்கு செயல் வடிவம் தந்தார். சுருக்கமாக சொன்னால் அன்றைய கோட்டாறு மறைமாவட்ட மண்ணின் பொதுவுடமை சித்தாந்தத்தின் நற்சிற்பியாய் செயல்பட்டார்.

நிலத்தை நிராகரித்துவிட்டு நதி எவ்வாறு நகர்ந்து விட முடியாதோ, அவ்வாறே அருள்தந்தை ஜேம்ஸ்தொம்பர் அவர்களின் ஆன்மீகப் பணியையும், சமூகப்பணியையும் இருவேறாகப் பிரித்துப்பார்க்க முடியாது. ஆம் இருபதாம் நூற்றாண்டில் குமரி மண்ணில் இவரது இறைபணியை நிராகரித்து விட்டு இயேசுவின் சமூகப்பணியை நினைக்கவே முடியாது. அந்த அளவுக்கு மக்களின் மனங்களில் நிறைந்து நின்றார். பிறந்த தேசத்தை மறந்துவிட்டு புகுந்த தேசத்திற்காக தன்னையே தந்தார்.

பெருந்தலைவர் காமராசரின் முன்னோடியாக குமரிமண்ணில் விவசாயம் செழிக்கச் செய்தார். ஆண்டுக்கு ஒருபோக மரவள்ளிக்கிழங்கு விவசாயத்தை மாற்றி 33 கிலோமீட்டர் நீள வாய்க்கால் அமைத்து 3 ஆயிரம் ஏக்கர் நெல் விவசாயம் உருவாக காரணியாயிருந்தார். இதனால் கல்வியும், செல்வமும், மக்களிடம் வந்தது. ஆலயம் தொழுவது சாலமும் நன்று என்பது கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற சிந்தனையும் மக்களின் அடிமனதில் பதிந்துக்கிடந்தது. 1958-ல் பரக்குன்று ஊரிலும், 1965-ல் நல்லாயன் புரத்திலும் தொடர்ந்து மேல்பாலை, இடைக்கோடு, தோமையார்புரம் ஆகிய இடங்களில் மக்களைக் கொண்டே ஆலயங்கள் கட்ட வைத்து நாங்கள் கட்டிய கோயில் என்று மக்களை பெருமிதம் கொள்ளச்செய்தவர். அதுபோல் மானிடர்க்கு நிழல்கொடுத்து காத்தால் போதாதென்று மலர்தூவியும் வரவேற்கும் மரங்களைப்போல் இவரால் 1963-ல் தொடங்கப்பட்டது தான் கே.எஸ்.எஸ்.எஸ் என்ற கோட்டாறு சமூக சேவை சங்கம்.

**கடற்கரை மக்களிடத்தில் சமூகப்பணி**:

மனிதர்கள் பிறப்பார்கள், இறப்பார்கள், மாமனிதர்கள் பிறப்பார்கள், இறப்பதில்லை. சில மனிதர்கள் வந்து போகிறவர்கள். மாமனிதர்கள் உலகிற்கு தந்துப் போகிறவர்கள். வறுமையின் உச்சத்தில் வாழ்ந்த கடற்கரை வாழ்மக்கள் பெரும்பாலானவர்கள் இன்று ஓரளவு வளர்ச்சிப் பெற்றிருப்பதில் மாமனிதரான அருள்தந்தை ஜேம்ஸ் தொம்பர் அடிகளாருக்கும் முக்கிய பங்கு உண்டு. புனித சவேரியார் மூலம் திருமறையைத் தழுவியவர்களின் வாரிசுகளாகிய பல கடற்கரை மக்களிடம் கருணைக்கொண்டார். இதற்காக தான் பிறந்த மண்ணான பெல்ஜியம் நாட்டிலிருந்து அருள்சகோதரி **லீவ் வான் டே** அவர்களை வரவழைத்து மக்களை சந்தித்தார். அவர்களிடையே நிலவிய வறுமை, கல்வியின்மை, பெண் உழைப்பு சுரண்டப்படுதல் முதலியவற்றைக் களையக் கனவுக்கண்டார்.

இதற்காக 1968-ல் பெல்ஜியம் மீன்வளத்திட்டத்தை அறிமுகப்படுத்தி முதன் முதலாக நைலான் வலைகளைப் பயன்படுத்தச் செய்தார். அதுவரையிலும் நூல் வலைகளையேப் பயன்படுத்திய மக்கள் இன்ப அதிர்ச்சியடைந்தனர். இதனால் மீன்பிடி தொழில் வருவாய் முன்னுக்கு வரத்தொடங்கியது. முட்டம், கடியப்பட்டிணம், கன்னியாகுமரி உட்பட 13 ஊர்களில் மகளிரைக் கொண்ட மீன்வலைப் பின்னும் மையங்களை உருவாக்கி அவர்களிடம் பணப்புழக்கத்தை உருவாக்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்தினார். 1972-ல் குழந்தைகளுக்கான மருத்துவ விடுதிகளும் 1973-75 காலகட்டங்களில் சுகாதாரப் பணிகளுக்காக செவிலியர் பயிற்சி மையங்களும் 1978-க்குள் சுகாதாரப் பணிக்குழுக்களையும் உருவாக்கினார்.

**மீன்பிடித்தொழில் புரட்சி**:

உலகில் நடைப்பெற்ற எல்லா புரட்சிகளிலும் ஏதாவது ஒரு மாற்றம் நிகழ்ந்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதற்கு குமரி மண்ணில் அருள்தந்தை. ஜேம்ஸ் தொம்பர் நிகழ்த்திய விசை இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் தொழில்புரட்சி முக்கிய எடுத்துக்காட்டாகும். உலக அளவில் குமரி மாவட்ட மீனவர்கள் திறமையாக இருப்பதற்கும் இதுவேக் காரணமாகும். குயிலுக்குக் கூவத்தெரியும். மயிலுக்கு ஆடத்தெரியும். இந்த அருள் பணியாளருக்கு எல்லாம் தெரியும். ஆம் 100 வெளி பொருத்துவிசை இயந்திரங்களை வாங்கி கட்டுமரங்களை பொருத்தினார். இப்பணிக்கு பொறியாளரான அருள்பணி ஜிலே அவர்களையும் தன்னோடு இணைத்துக் கொண்டார். கடலிலே அவரது கட்டுமரங்கள் முதன் முதலாக தண்ணீரைக் கிழித்துக் கொண்டுச் சென்று மீன்களை அள்ளி வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இது மக்களிடையே பெரும் பரபரப்பையும் உருவாக்கியது. 1974-ல் குறும்பனை, இனையம், மணக்குடி, ஆகிய இடங்களில் மீனவர் சங்கங்களை உருவாக்கினார். 1983ல் மீனவர் சங்கங்கள் ஒன்றிணைந்து மாவட்ட மீனவர் சங்கங்களின் இணையமானது. அவர் உருவாக்கிய சங்கங்கள் இன்றும் மீனவர் வாழ்வில் ஒளியேற்றிக் கொண்டிருக்கின்றது. ஓலமிடும் கடலையே ஊமையாக்கி சாதனைப் படைத்தவர் இவர்.

**மண்பாண்ட தொழிலாளர்களிடம்:**

தேனிருக்கும் பூவெல்லாம் வண்டு வந்தால் மலர்களெல்லாம் மகரந்த சேர்க்கையாகி அத்தனையும் காய் கனியாகிவிடும். ஆம்! அருள் தந்தை தொட்டதெல்லாம் பொன்னாகிவிடும். சுங்கான்கடை மண்பாண்ட தொழிலாளர்களும் விதிவிலக்கல்ல. 1982-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 6-ம் நாள் பொன்மலை திருமலை மண்பாண்ட தொழிலாளர் கூட்டுறவுக் குடிசை தொழில் சங்கத்தை பதிவுச்செய்தார். அருட்தந்தை. வட்டிக் கணக்கே வாழ்வென்றிருந்த மண்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சினார். இருளுக்குள் முடங்கிக்கிடந்த ஏழை, எளிய மக்களுக்கு இதன்மூலம் கல்வி, வேலைவாய்ப்பு, சொந்த வீடு, நிலம் கிடைக்கச் செய்தார்.

ஆனால் இந்த அருள்தந்தை அவர்கள் சுங்கான்கடையில் குனிந்து மட்டுமே உள்ளேச் செல்லக்கூடியதும் அதுவும் ஓர் கோழிக்கூட்டையே தனது வீடாக்கிக்கொண்டார் என்பதுதான் எளிமையின் உச்சம். குமரி மக்களை வளப்படுத்திட தன் சொந்த நாட்டின் வளங்களை கொண்டு வந்துக் கொட்டினார். தொழில்புரட்சிக்கு அடிப்படையாக தொழில் வல்லுநர்களை அழைத்து வந்து வலுவூட்டியவர். தன் தலையில் இருக்கவேண்டிய மணி மகுடங்களையெல்லாம் தரையிலே வைத்து தரணியை வாழவைக்க முயன்றவர். இறைவாழ்க்கையிலே சமூக வாழ்க்கையின் கதவுகளைத் திறந்தவர். சுற்றுகிற பூமியைக்கூட சுற்றி நின்று பார்க்கக்கூடிய அளவுக்கு சமூகப் பணியாற்றியவர்.

இறைபணி சேவையிலே ஒரு தேசமற்ற மனிதனாக தன்னை மனமாற்றிக்கொண்டவர். இல்லார்க்கும் இயலார்க்கும் இல்லையென்று கூறாது இயன்றவரை முயன்று இறைபணியாற்றியவர். கல்வாரி பாடுகளை காலம் தவறாமல் தியானித்தவர். நோய்களுக்கும், மனவேதனைகளுக்கும் மன்னன் இயேசு என்ற மயிலிறகால் மருத்துவம் செய்தவர். அவர் பணியாற்றிய இடங்களிலெல்லாம் வெள்ளைக்காகிதத்தில் வெள்ளைப் பூவாய் மக்கள் மனதில் வரையப்பட்டார். நல்லவர், வல்லவர், இறையருள் பெற்றவர் எனப்புகழப்பட்டாலும் அந்தப் புகழ்ச்சியிலே மகிழ்ச்சிக் கொள்ளார். பொதுவாகப் பார்த்தால் இவர் பொருள் செல்வர் அல்லர். ஆனால் இறைவாழ்வில் இவர் இறைச் செல்வர்.

இன்னும் எண்ணற்ற சிறப்புக்குரிய அருள்தந்தை ஜேம்ஸ்தொம்பர் அவர்கள் இறுதியில் பார்கின்சன் நோயினால் அவதியுற்றார். கடந்த 2002 -ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் நாள் மூச்சு விடுவதையும், தனது சமூகப்பணியையும் நிறுத்திக்கொண்டார். இன்னும் விண்ணிலிருந்து ஆன்மீகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இந்த விழா மலர் மூலம் நம்மிடையே அருள்தந்தை அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார் என்பது உண்மை.



# கல்விக்கண் கொடுத்த ஜாக்குஸ்

அருட்பணி. **மரிய சூசை**

காரிருளில் நடந்த மனிதருக்கு பேரொளியாக வந்தவர் தந்தை ஜேம்ஸ் தொம்பர் என்றழைக்கப்படும் ஜாக்குஸ்.

**வந்தார், சந்தித்தார், கல்விதந்தார்**
**வென்றார் மனங்களை...**

பணித்தொடங்கிய பணியாளர் மக்களின் கண்களில் கல்விக்கான ஏக்கம் கண்டார். ஏழைகள், எளியவர்கள், வறியோர்கள், வலு இழந்தவர்கள், தாழ்நிலையினராக இருந்த மக்கள் கல்வியைப் பெற்றால் தான் மனித வாழ்வை மகத்தானதாக மாற்ற முடியும் என்று உணர்ந்தார். ஓலைக்குடிசையில் வாழ வழியின்றி, உடுக்க உடையின்றி, உண்பதற்கு மரவள்ளிக்கிழங்கு மட்டுமே கொண்டிருந்த மக்கள் கல்வியை எப்படிப் பெறமுடியும்?

கற்பி, ஒன்று சேர், போராடு என்ற அம்பேத்கரின் மொழிக்கு இணங்க கற்றுக்கொடுத்தால் மட்டுமே, தான் பெற்ற இயேசு அனுபவத்திற்கு பொருள் சேர்க்கும் என்று எண்ணினார் ஜேம்ஸ் தொம்பர்.

எனவே 28-10-1954-ம் ஆண்டில் மணக்குடியில் வாழ்ந்த அன்னாள் சபை கன்னியர்களின் உதவியுடன் பணிதொடங்கினார். இன்றும் உயிருடன் வாழும் 95 வயதான அருட்சகோதரி கிறிஸ்தான்சுஸ் இதற்கு சாட்சி. போதுமான மின்சார வசதிகள் இல்லை. உணவிற்கே சிரமப்பட்டோம் என்று கூறுகிறார்கள். பள்ளிக் கூடங்கள் இல்லாதபோது மக்கள் கூலிகளாக, அடிமைகளாக, இழி மாந்தர்களாக உயிர் வாழ்ந்தார்கள். தந்தையால் உருவாக்கப்பட்ட அறிவெளி நம் மண்ணில் பிரகாசிக்க தொடங்கியதோ அப்பொழுது அடங்கத்துவங்கியயது அடிமைத்தனங்கள்

இவர்களைத் தூக்கிப்பிடிக்கவே 06.06.1955-ம் ஆண்டு நடுநிலைப் பள்ளியைத் தொடங்கினார். "**தேவனுக்காக தேசத்திற்காக**" என்ற விருது வாக்கு விழுதுவிடத் துவங்கியது. **அருட்சகோதரிகள் மெல்கியோர்மேரி, கிறிசாந்துஸ் மேரி, பபியான்மேரி** ஆகியோர் தாங்கிப்பிடித்தார்கள்.

**"அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்**
**தன் நோய்போல் போற்றாக்கடை"**

பிறர் துன்பத்தைப் போக்க பிறர் நோயை தன் நோய்போல பிறர் நிலையைத் தன் நிலைப்போல கண்டவர் ஜேம்ஸ்தொம்பர்.

மூன்றாண்டுகளுக்குப் பின் பலதடைகளைத் தாண்டி உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. தமிழக அரசின் முதல்வரான கர்மவீரர் காமராஜ் அவர்கள் 05.08.1958 ஆம் ஆண்டு திறந்து வைத்தார்.

தொடக்கப்பள்ளி இல்லாமல் உயர்நிலைப்பள்ளி செயல்படுதல் அவர்களைத் தலைமை ஆசிரியாராகக் கொண்டு தொடக்கப்பள்ளியை எஸ்.எம். மரியதாசன் அடிகள் தொடங்கினார்கள்.

மேல்பாலையின் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி இம்மண்ணின் சிறப்புகளை உயர்த்தியது. பள்ளியின் சின்னம் மற்றும் விருதுவாக்கு அருட்பணி ஜேம்ஸ் தொம்பர் அவர்களால் வடிவமைக்கப்பட்டது.

அடையாளச் சின்னத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோவில் கோபுரம், திருச்சிலுவை எரிகின்ற தீபம் ஆகியவை பச்சைநிறப் பின்னணியில் இடம் பெற்றுள்ளன.

மதம் தாண்டிய மனித நேயத்தைக் கற்றுக்கொடுத்த மனிதநேய ஆசிரியர் தந்தை ஜேம்ஸ்தொம்பர்.

பள்ளிக்கூடங்களில் கட்டுமானப் பணிகளில் ஜேம்ஸ்தொம்பர் தன் உடல் உழைப்பையும் கொடுத்தார்கள். கற்றல், கற்பித்தல் இவற்றில் எவ்வித மத வேற்றுமையும் இல்லாமல் விமர்சனங்கள் மத்தியிலும் மனிதாபிமானத்தோடு நடந்துக் கொண்டார்கள். பணி.ஜேம்ஸ்தொம்பர் தாளாளராக பணியாற்றிய 06.06.1955 முதல் 31.05.1962 வரையுள்ள காலங்கள் கலங்கரை விளக்காய் திகழ்கின்தது. இன்று புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியானது மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள், ஆசிரியர்கள், அறிவியல் அறிஞர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என்று பார் போற்றும் பள்ளியாக உள்ளது.

மரியன்னை மேல்நிலைப்பள்ளியின் வான்புகழ் பல லட்சம் மக்களின் வாழ்வுக்கு கலங்கரை விளக்காய் உள்ளது. எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக உயர்ந்து நிற்கும் இப்பள்ளியில் இன்று 70-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணி செய்கின்றார்கள். சராசரியாக ஆண்டுதோறும் 1800 மாணவர்கள் கல்வியைப் பெறுகின்றார்கள். இங்ஙனம் கணக்குப்பார்த்தால் கடந்த ஆண்டுகளில் 1,50,000 மாணவர்கள் கல்விப் பெற்றுச் சென்றிருக்கின்றார்கள்.

பரக்குன்றில் பிள்ளைகளில் மிகச்சிலரே பள்ளிக்குச் சென்றனா். உடுத்த உடை இல்லை, புத்தகம் வாங்க பணம் இல்லை. எனவே பள்ளிக்கூடம் தொடங்க ஆர்வம் கொண்டார் பணியாளர். ஜேம்ஸ் தொம்பர்.

பணத்தை வருவிக்க தொழில் ஒன்று தொடங்கினார். அதற்காக நூற்பு நெசவு மையம் தொடங்கப்பட்டது. நூல் நூற்பது தங்களுக்கு வேண்டிய உடைகளை தாங்களே செய்துக்கொள்ள முடிந்தது. மட்டுமல்லாது சிக்கன சேமிப்புத்திட்டம் ஒன்றையும் தொடங்கினார்.

இங்ஙனம் ஒருபுறம் உழைப்பு சேமிப்பு மறுபுறம் கல்வி என்ற அடிப்படையில் (Earn and Learn) **உழைத்துக்கொண்டே படி** என்ற கருத்து கனவை நின்று விடாது நனவாக்கினார்

மலையடி என்ற கிராமத்தில் ஆதிதிராவிட பள்ளியும், 4 கி.மீட்டர் தொலைவில் R.C. தொடக்கப்பள்ளியும் இருந்தது. சாதிப்பின்னணியில் பின்னிக்கிடந்த சமூகத்தில் பள்ளிகளும் சாதிவாரியாகவே அமைந்திருந்தன. நல்லாயன்புரம் கண்ட நல்முத்து ஜேம்ஸ் தொம்பரால் பள்ளிக் கூடங்கள் ஆலயமாகவும், ஆலயங்கள் பள்ளிக்கூடங்களாகவும், பள்ளிக்கூட பெஞ்சுகள் பலிபீடமாகவும் பயன்பட்டன.

அரசின் உத்தரவுப் பெற்று அரசினர் பள்ளியில் ஐந்தாம் வகுப்பும் ஏற்படுத்தினார். அதுவே அந்த இடத்தின் வளர்ச்சிக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தியது. நல்லாயன்புரம் ஆரம்பப்பள்ளிகூடம் மற்றும் அருகாமையில் உள்ள ஆரம்பப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிக் கூடத்திற்கு மாணவர்களை சேர்ப்பதற்கு உதவியாக அமைந்தன.

இவ்வாறு ஜேம்ஸ் தொம்பரின் கல்விப்பணி, பரக்குன்று, மேல்பாலை, நல்லாயன்புரம் போன்ற ஊர்களைச் சுற்றியுள்ள அனைத்து ஊர்களுக்கும் குறிப்பாக இடைக்கோடு, ஆறுகாணி, பத்துக்காணி, மஞ்சாலுமூடு, காரைக்கோணம், கண்ணுமாமூடு போன்ற அனைத்து ஊர்களையும், கல்வி வளையத்தில் கொண்டு வந்தது.

கல்விப்பணி என்பது பள்ளிக் கூடங்களில் கொடுக்கப்பட வேண்டிய ஒன்றாக ஜேம்ஸ் தொம்பர் பார்க்கவில்லை. மாறாக, வாழும் கலையை கற்பதே கல்வி என்ற பாணியில் சொல்லிக் கொடுத்தார்.

உழைத்து உணவைப் பெறவேண்டும் என்பது பாடம். எங்கள் ஆலயத்தை நாங்கள் கட்டினோம்.

தன்மானத்துடன் வாழ்வது அடங்க மறுப்பது, சாதிய வேறுபாடுகளை வேரறுப்பது. ரௌத்திரம் பழகுவது. அடிமை வாழ்வை அகற்றுவது, சுதந்திரமாக வாழ்வது, எல்லோரும் கடவுளின் பிள்ளைகளே மனித மாண்போடு வாழ்தல், சமத்துவம் பேணுவது, மனிதர் அனைவரும் சமம். ஆன்மீகம் என்பது அனைவரும் இணைந்து வாழ்வதில் அடங்கியுள்ளது. இணைந்து பயணிக்கும் இதயங்கள் தான் இன்றும் தேவை.

தந்தை ஜேம்ஸ் தொம்பரால் நாங்கள் வாழ்வைக் கண்டோம், வளர்ந்தோம், வாழ்கின்றோம், வாழ்வைக்கொடுக்க விழைகிறோம்.

## மண்பாண்ட தொழிலாளர்கள் சுங்கான்கடை

எங்கள் இதயதெய்வம் அருள்தந்தை ஜேம்ஸ் தொம்பர் அவர்கள் 1950-ம் ஆண்டு இந்தியாவிலுள்ள ஏழை, எளிய மக்களுக்கு சேவை செய்வதற்காக வருகைதந்தார். 1968-க்கு பிறகு மக்களின் இன்ப, துன்ப நிகழ்வுகளில் பங்கெடுத்து மக்களோடு மக்களாக பழகிவந்தார்.

"**ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்**" என்ற உயரிய சிந்தனையோடு சமூக சேவை மையம் அமைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு ஊட்டச்சத்து மாவு, எண்ணெய், கோதுமை, பால்பவுடர், மருத்துவம், ஆகியவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ள வழிவகுத்தார். 1990 காலகட்டத்தில் நாங்கள் மண்பாண்ட தொழில் "**தொழுவம்**" போன்ற சிறு குடிசைகளில் வைத்து செய்வதையும், மழைக்காலங்களில் குடிசைகள் ஒழுகுவதையும், தொழில் செய்ய முடியாமல் துன்பப்படுவதையும், நாங்கள் வசிக்கும் பகுதியில் மழைநீர் தேங்கி சேறும் சகதியுமாக காட்சியளிப்பதையும் பார்த்து உடனடியாக "**கருங்கல்**" கொண்டு வந்து சாலை அமைத்து தந்தார். தண்ணீர் வசதிக்கு கிணறு வெட்டி தந்தார்.

1975-ல் எங்களை ஒன்றிணைத்து 'மண்பாண்ட கலைஞர் சங்கம்' ஆரம்பித்து அதன் தலைவராக அவரே இருந்து செயல்படுத்தினார். எங்களிடமிருந்து ரூபாய் 10 வாங்கி உறுப்பினராக சேர்த்து மீதி பணம் தந்தை அவர்களின் சொந்த பணத்தில் போட்டு சங்கம் அமைத்தார். அப்போது 11 பேர் உறுப்பினராக இருந்தார்கள். சங்க உறுப்பினர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதை பார்த்த பலர் மேலும் வேலை கேட்டு சங்கத்திற்கு வந்தார்கள். அதன்பிறகு அவர்களையும் உறுப்பினராக சேர்த்து "**மண்பாண்ட கலைஞர் சங்கம்**" சிறப்பாக நடந்து வந்தது.

1978 - ஆம் ஆண்டு மண்பாண்ட கலைஞர் சங்கத்திலுள்ள அனைவருக்கும் தந்தை அவர்கள் வாங்கிய இடத்தில் "**ஓட்டுவீடு**" கட்டித்தந்து வாழ வைத்தார். வீடு கட்டி முடிந்தவுடன் மாதம் ரூபாய் இருபது வைத்து பிடித்தம் செய்து ரூபாய் இரண்டாயிரம் ஆனவுடன் அனைவருக்கும் "**தானபத்திரம்**" தந்து பெருமைப் படுத்தினார். இந்நேரத்தில் மண்பாண்ட கலைஞர்களுக்கு தொழில் செய்ய இடம் பற்றாக்குறை என்பதை உணர்ந்து 1981 -ல் 1 ஏக்கர் 18 சென்ட் நிலம் மண்பாண்ட கலைஞர்களுக்கு வேண்டி வாங்கி தொழில் கூடங்களும், புதிய நவீன சூளையும், நவீன மின்சக்கரங்களும் வாங்கி தந்து எங்கள் வருமானத்தை பெருக்க வழிவகை செய்தார்.

மேலும் கல்வி என்பது அமிர்தம் நம் வாழ்வை விருட்சம்போல் வளரசெய்யும் என்னும் உயரிய நோக்கோடு எங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க தூண்டி உதவிகளும் செய்தார். எங்களிடையே சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கி கருத்தாய் சேமித்து வளமாய் வாழ்ந்திட கற்றுத்தந்தார். பெரியவர்கள் எழுதப்படிக்க தெரியாதவர்களுக்கு எழுத்து கற்றுதர சமூகசேவை சங்க பணியாளர்களை அனுப்பிவைத்தார்.

"**கூடி வாழ்ந்தால் கோடி நன்மை**
**கூட்டுறவே நாட்டுயர்வு**

என்னும் உயரிய நோக்கோடு 1982-ல் கூட்டுறவு சங்கமாக "**கதர் கிராமத் தொழில்**" வாரியத்தில் பதிவு செய்து "**பொன்மலைத் திருமலை மண்பாண்ட கூட்டுறவு குடிசைத்தொழில் சங்கம்**" என பெயரிட்டு அதன் தலைவராகவும் செயல்பட்டு எங்களோடு எங்கள் தந்தையாக, தாயாக, சகோதரராக தோள்கொடுத்து வந்தார். எங்கள் பண்டிகைகளில் கலந்து எங்களை மகிழ்வித்தார். பண்டிகை காலங்களில் போட்டிகள் வைத்து விருந்து சமைத்து தந்து எங்களோடு விருந்துண்டு மகிழ்ந்ததோடு எங்களையும் மகிழ்வித்து எங்கள் இதயங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

1986-ல் வீடு கட்டி தந்தது அனைவருக்கும் தனித்தனி பட்டா வாங்கி தந்தார். முக்கியமாக வீடுகளுக்கு "**மின்வசதியும்**" செய்து தந்து எங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கினார்.

# பரக்குன்று பனைவெல்லக் கூட்டுறவு சங்கம்

அருட்பணி. M. **ஜாண் மிக்கேல் ராஜ்**
திரு. S. **சுனில் ராஜ்,** பரக்குன்று

பனைவெல்லக் கூட்டுறவு சங்கத்தை பற்றி அறிவதற்கு முன் பரக்குன்றை பற்றிய அறிதல் முக்கியம்.

பரக்குன்று பரங்கி மரமும் (முந்திரி மரம்), பனைமரங்களும் அடர்ந்த வளர்ந்த காடு பகுதியாகும். இங்குள்ள நிலங்கள் அனைத்தையும் நாயர்களுக்கு திருவிதாங்கூர் மன்னன் வழங்கியிருந்தார்.

நாயர்கள் கல்வியறிவு மிக்கவர்களாகவும், செல்வாக்கு மிக்கவர்களாகவும் இருந்தார்கள். சமவெளிப் பகுதிகளில் ஆங்காங்கே வீடுகள் கட்டி வாழ்ந்து வந்தார்கள். பனைமரங்களிலிருந்து வருவாய் பெற விரும்பிய நாயர்கள் பனையேறும் தொழிலைச் செய்த பனை ஏறிகளை பல இடங்களிலிருந்து கொண்டு வந்து தங்கள் நிலப்பரப்பில் குடியமர்த்தினர். இவர்கள் பனை உரிமையாளர்களுக்காக பனைமரங்கள் ஏறி வந்தனர். இவர்கள் படிப்பறிவு அற்றவர்களாகவும், கள் குடிகாரர்களாகவும் சொல்லப் போனால் ஏதும் அறியாத அப்பாவிகளாக, வாழ்க்கையில் இலக்கற்றவர்களாக வாழ்ந்து வந்தார்கள்.

**பனை ஏறிகளின் சம்பளம் அல்லது கூலி:**

குறிப்பிட்ட இடத்தில் குடியேறி அங்குள்ளப் பனை மரங்களிலிருந்து பதனீரை (அக்கானி) இறக்கும் பனை ஏறிகளின் உழைப்புக்கு கூலி என்பது பணமாக இருந்ததில்லை. மாறாக மரத்திலிருந்து கிடைக்கும் பதனீர் ஒரு நாள் பனை உரிமையாளருக்கும் மறுநாள் மரம் ஏறுபவருக்கும் என்று நடைமுறையில் ஒத்துக் கொள்ளப்பட்ட கூலியாக இருந்தது. இம்முறை வாரம் முறை எனப்பட்டது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் சொத்துக்களை அப்பகுதியில் வாழ்ந்த சில வசதிபடைத்தவர்கள் நாயர்களிடமிருந்து விலைக்கு வாங்கிவந்தனர். இவ்வாறு வாங்கிய புதிய உடமையாளர்களோ அல்லது நாயர்களோ தங்கள் குடும்பத்தின் பண நெருக்கடியைச் சமாளிக்க தங்களுக்கு உரிமைப்பட்ட பனைகளை ஒரு மரத்திற்கு இவ்வளவு ரூபாய் என குறுகிய காலத்திற்கு அடமானம் வைப்பதுண்டு. ஒருவருடத்திற்குள் அத்தொகையைக் கொடுத்துத் தனது பனையை உரிமையாளர் மீட்டுக்கொள்ள வேண்டும். இது பாட்டம் முறை எனப்பட்டது. இம்முறையிலும் பனைஏறுபவருக்கு வாரம் முறையிலேயே கூலி வழங்கப்பட்டது. இம்முறையில் பாட்டம் பெற பெருந்தொகை தேவைப்படவில்லை. ஆகவே பாட்டம் எடுக்கும் நிலைக்கு வளர்ந்திருந்த சில பனை ஏறிகள் பாட்டம் எடுத்தனர். இதில் ஈடுபட்ட பனைஏறிகள் விரைவாகப் பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டனர்.

குறிப்பிட்ட பனை மரங்களுக்காக, குறிப்பிட்ட தொகையை பனை உரிமையாளருக்குக் கொடுத்து 10 முதல் 15 ஆண்டுகளுக்கு என அடமான பத்திரம் எழுதிக்கொடுத்து, கடனுக்கு ஈடாக பனையும், வட்டியாக மரத்தின் பயன்களையும் அனுபவிக்கும் உரிமை பெறும் முறை ஒற்றி முறை எனப்பட்டது. இம்முறையிலும் பனைஏறிக்குக் கூலி வாரம் முறையிலேயே வழங்கப்பட்டது. இப்படி ஒற்றி எடுப்பதற்கு அதிக பணம் தேவை. ஆகவே அதிகமான பனை ஏறிகள் ஒற்றி எடுப்பதில்லை.

எது எப்படியானாலும் ஒருநாள் அக்கானி பனைஏறிக்குக் கிடைத்து வந்தது. இதனால் பனைஏறிகளின் வீட்டில் எல்லாநாளும் பனை வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இதை விற்று பணமாக்குவது பெரும் சவாலாகவே இருந்தது. ஏனெனில் நியாயமான விலை கிடைப்பதில்லை. இடைத்தரகர்களின் ஏமாற்றும், புரட்டும் பனைஏறிகளின் வாழ்வை முன்னேற விடாமலேயே வைத்திருந்தது. குடும்பத்தில் முன்னேற்றமோ, சந்தோசமோ இருந்ததில்லை.

**பனைஏறிகளும் தந்தை ஜேம்ஸ் அவர்களும்:**

தந்தை ஜேம்ஸ் தொம்பர் அவர்கள் அனைவரிடமும் அன்பாக பழகக் கூடியவர். சாதி மத பேதமின்றி அனைத்து மக்களையும் குடும்பங்களையும் சந்தித்தவர். ஒவ்வொரு குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தையும் நன்றாகப் புரிந்தவர். அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த என்ன வழி என ஆழமாகச் சிந்தித்தவர்.

1952-53-ம் ஆண்டு காலகட்டத்தில் காந்தியடிகளின் கிராமப்புற முன்னேற்றத் தொழில்களில் பனை வெல்லத் தொழில் கதர் மற்றும் கிராம கைத்தொழில் ஆணையத்தின் கீழ் இடம்பெற்று முக்கியத்துவம் பெற்றதை தந்தை ஜேம்ஸ் அறிந்திருந்தார்.

**பனை ஏறிகளை ஒன்று சேர்த்தல்:**

பனை ஏறும் மக்களை அடிக்கடி சந்தித்து பேசினார். அவர்களை ஒருங்கிணைப்பது பற்றி மறைமாவட்ட குருக்கள் சிலரிடம் பேசினார். குருக்கள் அவர் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. எழுத்தறிவற்ற, குடிக்கு அடிமையான இந்த மக்களை ஒருபோதும் திருத்த முடியாது. உங்களது பொன்னான நேரத்தை வீணடிக்காதீர்கள் என்று அறிவுரை கூறினார்கள். இவர்களை ஒருங்கிணைப்பது சாத்தியமற்றது என பலரும் தெரிவித்தார்கள்.

இன்னொருபுறம் மக்கள் மத்தியிலிருந்தத் தலைவர்கள் சுரண்டலில் தேர்ந்தவர்களாக இருந்தனர். செல்வாக்கு மிக்க அவர்கள், எழுதப் படிக்கத் தெரியாத பனை ஏறிகளின் பிரச்சனைகளில் கட்ட பஞ்சாயத்து செய்து வாழ்ந்தார்கள். பகைமையை மூட்டிவிட்டு அதில் பிழைப்பு நடத்தினர். மக்கள் மத்தியில் மூடநம்பிக்கையையும், மாந்திரீக மனப்பான்மையையும் வளர்த்து வந்தார்கள். மந்திரவாதம், பில்லிசூனியம் போற்றவற்றால் எல்லாம் சாதித்துவிடலாம் என்ற மனப்பான்மையை வளர்த்திருந்தார்கள். இவர்களின் எண்ணத்தில் "**சாமியார்**" சங்கம் அமைத்தால் நம்மை யாரும் மதிக்கப்பட்டார்கள். நமது பிழைப்புக்கு பேராபத்து என்று நினைத்து பனை ஏறிகளிடையே தந்தை ஜேம்ஸ் தொம்பர் பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறி பனைஏறிகளைத் திசை திருப்பி கொண்டே இருந்தார்கள். எப்படி எல்லாம் மக்களை பிளவு படுத்த முடியுமோ அப்படியெல்லாம் முயன்றார்கள்.

**பனங்கருப்பட்டி பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கம்:**

பனைஏறுவோர் மட்டுமே இந்த சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்க முடியும். ஒத்தக் கருத்து கொண்ட நபர்கள் இச்சங்கத்தோடு இணைந்துச் செயல்பட விரும்பினால் உறுப்பினர் ஆகலாம். ஆனால் பனைஏற்றுத் தொழில் செய்யாத நபர்கள் மொத்தச் சங்க உறுப்பினர்களில் 5% மட்டுமே இருக்க வேண்டும். என்ற விதி பின்பற்றப்பட்டது. நிர்வாகக் குழுவில் 7 உறுப்பினர்கள் இருக்கலாம். தந்தையின் பேச்சை ஏற்றுக் கொண்ட மக்கள் தலைவர்களில் ஒருவரை பனைஏற்றுத் தொழில் செய்யாத உறுப்பினராகவும், நிர்வாகக் குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்க ஒப்புக்கொண்டார்கள். பனை ஏறுவோர் அனைவரின் வேண்டுகோளின்படி சங்க நிர்வாகக் குழு தலைவராக தந்தை அவர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். 1954 - ம் ஆண்டு பரக்குன்று பனை வெல்ல உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிட். 3343 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டது. அதன் வளர்ச்சி குமரி மாவட்டம் முழுவதும் பரவி விரிவடைந்தது. பின்னர் கன்னியாகுமரி மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்ட போது அதன் துணைத் தலைவராக தந்தை ஜேம்ஸ் நியமனம் செய்யப்பட்டார்.

**சங்கத்தின் திட்டங்கள்:**

சங்கத்தின் மூலம் செயல்படுத்திய திட்டங்கள் பல. பனைஏறுவோரின் உழைப்பு எளிமையாக இருக்க வேண்டும் என்பதற்காக சங்கம் வழியாக முதல் பத்து ஆண்டுகள் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஒரு பனையிலிருந்து அடுத்த பனைக்கு போக பனைமரங்களை இணைத்துக்கட்டி பாலம் அமைக்கப்பட்டது.

பதனீரை சேகரித்து ஒரே இடத்தில் காய்ச்சி கருப்பட்டி உருவாக்கும் பழக்கம் கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து கருப்பட்டியிலிருந்து பலவகையான இனிப்புப் பண்டங்கள் (சிறுவயதில் நம்மில் பலரும் ஒரு மணி நேரம் வரை வாயில் போட்டு சாப்பிட்ட கல்கோனா) மிட்டாய்கள் என பல பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டது. மும்பையிலிருந்து இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு பனஞ்சீனி தயாரிக்கத் தொழிற்கூடம் அமைக்கப்பட்டது. பின்னர் பிரான்சிலிருந்து இறக்கப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு மேலும் தரமுயர்ந்தத்தப்பட்டது. ஆனால்

பதனீரிலிருந்து பனஞ்சீனி நேரடியாகத் தயாரித்தார்கள். சங்கம் பனைஏறுவோர் நலனுக்காக பனைமரங்களை ஒற்றிக்கு எடுத்து பனைஏறுவோருக்குப் பிரித்து வழங்கி அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு எடுத்த முயற்சிகளில் வெற்றியும் கண்டது. அதற்காக கதர் கிராமத் தொழில் ஆணையம் ரூ. 20 இலட்சம் மற்றும் ஜெர்மனி நிறுவனம் (மிசரியோர்) ரூ.1,00,000 கடன் வழங்கியது. பனைஏறுவோர் வாரம் முறையில் பெறும் பதனீரை அவரவர் வீட்டிலிருந்து தொழிற்சாலைக்குக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்யப்பட்டது. பதனீரை சேகரிப்பதற்காக தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதன் மூலம் கிடைக்கும் இலாபம் சங்க உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அடுத்ததாக பனை நார் (பனந்தும்பு ஆலை) தொழிலுக்கென கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் குளச்சல் ஊரை சுற்றி வாழ்ந்த மக்கள் பனை நார்களை சுத்தப்படுத்தி பளபளப்பாக்கி கலர் சேர்த்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தனர். அவற்றை ஒருங்கிணைத்து முதல் முதலில் பரக்குன்று கூட்டுறவு சங்கம் வழியாகப் பனந்தும்பு மற்றும் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதற்காக தமிழகம் எங்குமிருந்து பனந்தும்பு பரக்குன்றுக்கு வருவிக்கப்பட்டது. தினமலர் பத்திரிக்கை 01-11-1964 அன்று வெளியிட்டச் செய்தியில் கீழுள்ளவாறு குறிப்பிடுகிறது. விளவங்கோடு தாலுகாவிலுள்ள பரக்குன்று என்ற இடத்தில் பனம்தும்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் உற்பத்தியாகும் பனம்தும்புகள் எல்லாம் இங்குக் கொண்டுவரப்பட்டு, பல பொருட்கள் செய்யப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படும்.

தினமலர் 17-09-1964 அன்று வெளியிட்டச் செய்தியில் மேல்புறம், திருவட்டார் யூனியன்கள் நிருபர்கள் பார்த்தது என்ன? என்றத் தலைப்பின் கீழ் இவ்வாறு குறிப்பிடுகிறது. பரக்குன்று கிராமம் ஓர் புதிய சகாப்தத்தை உருவாக்கி வருகிறது. இங்கு பிரதான தமிழ் கலையின் அடிப்படையோடு நவீன அமைப்பு கொண்ட கத்தோலிக்க மத கோவில் ஒன்று இருக்கிறது, இங்கு கத்தோலிக்க சுவாமியார் பெல்ஜிய நாட்டைச் சார்ந்த மறைதிரு. டி. ஜேம்ஸ் தொம்பர் ஏழைகளோடு அன்பாகப் பழகி அவர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகிறார். ஏராளமான பெண்கள் தும்புத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இங்கு சிறு ரக சீனி ஆலை உருவாகுகிறது. பதனீர் காய்ச்சி பதமாக்கப்பட்டு சீனி செய்யப்படும். கூட்டுறவு முறையில் ஏற்படுத்தப்படும் இந்த சீனி ஆலை இவ்வட்டார பனை ஏறும் தொழிலாளர்களுக்கும், மற்றும் ஊர் மக்களுக்கும் வேலை வாய்ப்பை அளிக்கும். இங்குள்ள தும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் முயற்சிகளை மறைதிரு. ஜேம்ஸ் தொம்பர் சுவாமிகள் செய்து வருகிறார்.

**சோதனையும் உயர்வும்**:

பதனீரிலிருந்து உற்பத்தியாகும் பொருட்களும் பனைநார் தும்புகளும் சங்கம் வழியாக சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் விற்கப்பட்டது. அமோக வளர்ச்சியும் காணப்பட்டது. வளர்ச்சியைப் பார்த்து பலரும் பொறாமைப்பட்டனர். சங்கத்தின் மேலும் தலைவர் மேலும் தவறுகள் நடை பெற்றிருப்பதாக வழக்குகள் தொடரப்பட்டது. அனைத்தையும் நேர்ப்பட எதிர்கொண்டு வெற்றி கண்டார் தந்தை. ஜேம்ஸ்.

பனை ஏறுவோரின் வாழ்க்கைத்தரம் உயரத் தொடங்கியது. அவர்கள் பிள்ளைகள் படித்தனர். மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் கண்டனர். சமுதாய அமைப்பு முறையில் மாற்றம் கண்டனர். பெண்களின் வாழ்க்கையிலும் மாற்றம் காணப்பட்டது. பனைவெல்ல உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மூலம் தொடங்கப்பட்ட நியாய விலை கடை இன்றும் பரக்குன்றில் செயல்பட்டு வருகிறது.

முன்னோர்களிடம் தந்தையை பற்றி பேசினால் அவர் சாமி இல்லை. கையெடுத்து வணங்கும் கண்கண்ட தெய்வம். நாங்கள் வணங்குகிறோம் என்று கூறுவார்கள். ஆம் அது உண்மையே.

**சிந்தனைத் துளிகள்**

ஏழைகளின் ஏழ்மைப் போக்க தாராளமாய் உதவுவது மட்டுமல்ல சமத்துவ சமூக அமைப்பை உருவாக்கவும் உழைக்க வேண்டும்.

# போதையைத் தடுப்பதில் வேர்களாய்... கனிகளாய்



தொகுப்பு : அருள்முனைவர்.
**து. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்**
இயக்குநர், திருப்புமுனை போதைநோய் நலப்பணி, கோட்டாறு மறைமாவட்டம்.

**அறிமுகம்**:

அருட்பணியாளர் ஜேம்ஸ் தொம்பர் ஒரு மாபெரும் சமூகப்பணியாளர். அன்றையச் சமுதாயச் சூழலில் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவில் அடிப்படை சமூகப்பொருளாதார திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி, மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு சிறந்த சமூகச்சிற்பி. "ஏழையோரே பேறுபெற்றோர்" என்று சொல்லி அவர்களுக்காக இறையரசை உருவாக்க முனைந்த இயேசுவைப் போல ஏழையரின் விடியலுக்காய் பாடுபட்ட ஒரு அரும்பெரும் சமூகப்போராளி. அவரது 100-வது பிறந்தநாளைப் பற்றி நினைக்கும்போது அவர் இன்று நமது சமுதாயத்தில் பணியாற்ற நேர்ந்தால் நிச்சயமாக இந்த சமுதாயத்தைப் பாதிக்கும் பிரச்சனைகளில் முதன்மையானதாக இருக்கும் போதைசார் பணிகளையும் முன்னெடுத்திருப்பார் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

இன்றையச் சமுதாயத்தை உற்றுநோக்கும்போது அங்கிங்கனாதபடி எங்கும் போதை வேர்விட்டுக் கிடக்கின்றது. இந்த பூதகரமான போதையின் வேர்களினின்று நமக்குக் கிடைப்பது பாதிப்புகள் என்ற கனிகளே என்று நாம் அனைவருமே அறிந்திருக்கின்றோம். "தாயைக் கொன்று, அவளது இதயத்தை விற்றுக் கிடைக்கும் பணத்தில் பால் வாங்கி குழந்தையை வளர்ப்போம்" என்று சொன்னால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இருக்கின்றது.

**போதையில் வரும் வருமானம்**:

போதை என்றாலே "தீமை" என்ற தெரியாதவர் யாருமே இருக்க முடியாது. போதை என்றாலே 'கேடு' என்ற அறியாதவர் யாருமே இருக்க இயலாது. போதை என்றாலே 'அழிவு' என்று உணராதவர் யாருமே இருக்க வாய்ப்பில்லை. இப்படி 'நல்லதல்ல' என்று எல்லாருமே தெரிந்து, அறிந்து, உணர்ந்து இருந்தாலும் போதையின் வேர்கள் மட்டும் இன்னும் ஆழமாகவும், அகலமாகவும் பரந்து விரிந்து பரவிக் கொண்டிருக்கும் அவலநிலையைத்தான் கண்கூடாகக் காண்கின்றோம். தனிநபர், குடும்ப, சமூகப்பொருளாதாரத்திற்கு போதையினால் கணக்கிட முடியாத அளவில் அழிவுகளும், சீரழிவுகளும், பேரழிவுகளும் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

மதுபோதைக்கு ஆளாகுபவருக்கு ஏதாவது நன்மை ஏற்படுகின்றதா? மதுபோதையினால் அவரின் குடும்பத்திற்கு ஏதாவது நன்மை கிடைக்கின்றதா? மதுவினால் நமது சமுதாயத்திற்கு ஏதாவது நன்மை வருகின்றதா? யாருக்கும் நன்மையில்லை என்றுத் தெளிவாகப் புரிந்தாலும் மதுவின் உற்பத்திக்கும், விற்பனைக்கும், புழக்கத்திற்கும் அரசாள்பவர்கள் சம்மதம் தெரிவிப்பதேன்? பதில் எளிது. இதில் கிடைக்கும் வருமானம்.

**போதை வருமானம் பற்றி காந்தி**:

நமது தேசத்தந்தை காந்தியடிகள் "நான் இந்தியாவிலிருந்து மதுவையும், போதைப்பொருட்களையும் விரட்டியடிப்பதற்காக ஒரே ஒருநாள் மட்டும் சர்வதிகாரியாகவும் இருக்கத் தயாராயிருக்கின்றேன்" என்றார். எந்த ஒரு அரசுப் பதவியும் வேண்டாமென்ற அரசியல் நிலைப்பாடு எடுத்தவர், போதை விஷயத்தில் மட்டும் இப்படியொரு அதிரடி முடிவை எடுக்கக் காரணமென்ன? காந்தியடிகளே "திருட்டுத் தொழில் செய்பவர்களுக்கு நிறைய பணம் கிடைக்கிறது. அரசு திருட்டுக்கு வரியுடன் கூடிய அனுமதியளித்தால் அரசுக்கு பணம் தாராளமாக ஏராளமானோரிடமிருந்து கிடைக்குமல்லவா?" என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார்.

அறிஞர் அண்ணா "மதுவிலிருந்து கிடைக்கும் வருமானம் என்பது தொழுநோயாளியின் கரங்களில் இருக்கும் வெண்ணெய்க்கு

நிகரானது” என்றார். ஒரு தொழுநோயாளியின் புண்ணான கைகளிலிருந்து யாராவது வெண்ணெய் எடுத்து சாப்பிட முன்வருவார்களா? மக்கள் நலனுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுக்கு “மது மக்களைச் சீரழிக்கின்றது” என்று தெளிவாக ஆய்வறிக்கைகள் இருந்தும் மக்களின் நலனை அழிக்க அரசு மது விற்பது குற்றச் செயலாகும்.

**போதையினால் பாதிப்புகள்:**

ஒரு சிறைச்சாலை சந்திப்பில், அங்குள்ளவர்களில் 90 சதவீதம் பேர் போதையில் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பது தெரிய வருகின்றது. இன்று 13 முதல் 19 வயது வரையிலான வளரிளம் பருவச் சிறார் பெரும் எண்ணிக்கையில் போதையில் மாட்டிக் கிடக்கின்றார்கள். அதுபோலவே, இன்னொரு சிறைச்சாலையில் மேற்கொண்ட ஆய்வில் 85 சதவீதம் பேர் போதையில்தான் பாலியல் வன்புணர்வு செயல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

போதையில் விபத்துக்கள், வன்செயல்கள், குழப்பங்கள், கலவரங்கள் என்று குற்றச் செயல்கள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. இக்குற்றங்களைத் தடுக்க காவலர்களின் எண்ணிக்கையை அரசு கூட்டிக் கொண்டேயிருக்கின்றது. ஆனாலும் தடுக்க இயலாமல் தடுமாறுகின்றது. குற்றங்களைப் பதிவுசெய்ய, விசாரிக்க, வழக்காட, தண்டிக்க என்று பல்வேறு பணிகளை நீதிமன்றம் செய்யவேண்டியிருக்கின்றது. பெருகிவரும் குற்றங்களால் நீதிமன்றங்களே திணறுகின்றன. போதையினால் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் வன்செயல்களால் போதைக்கு ஆளானவர்களும், போதைக்கு ஆளாகமலே பாதிப்புக்குள்ளானவர்களுக்கும் விளைந்துள்ள மருத்துவச் செலவுகள் நம்மை அதிர்ச்சியடையச் செய்கின்றது. மருத்துவம் பார்த்தாலும் பாதிப்புகள் முழுவதும் தீர்ந்து விடுவதில்லை. தொடர் மருத்துவம் தொடர வேண்டியிருப்பதால் செலவும் தொடர்கின்றது. விபத்தில் மாட்டியவர்களுக்கு இழப்புத்தொகை கொடுப்பது, இறந்தவர்களுக்கு கூட்டுத்தொகை வழங்குவது, ஏற்பட்ட பொருட்சேதத்திற்கு நஷ்டஈடு தருவது, போக்குவரத்துத்துறைக்கு வாகனச் சேதங்களுக்காக ஒதுக்குவது என்று சொல்லிக் கொண்டே போகலாம். எதார்த்தம் என்னவென்றால், வருமானம் மொத்தமாக தீர்ந்து விடும். ஆனால் செலவு பல்வேறு விதங்களில், பல்வேறு துறைகளில், பல்வேறு இடங்களில், பல்வேறு காலச்சூழல்களில் நடப்பதால் மொத்தத் தொகையைத் துல்லியமாகக் கணக்கிடுவது மிகக் கடினம். அரசுக்கும், சமூகசேவை நிறுவனங்களுக்கும், குடும்பத்துக்குமாகச் சேர்த்து பார்த்தால் வருமானத்தைவிட பல மடங்கு செலவு அதிகமாயிருக்கின்றது.

போதை ஆயுளைக் குறைக்கின்றது. நோய்களை உருவாக்குகின்றது. மனைவியரை விதவையாக்குகின்றது. குழந்தைகளை அனாதையாக்குகின்றது. குடும்பத்தை கடனாளியாக்குகின்றது. பொருளாதாரத்தில் ஏழையாக்குகின்றது. சமூகத்திற்கு பாரமாக்குகின்றது. குடிப்பதால் தன்னைப் பராமரிக்க இயலாமை, குடும்பத்தைக் கவனிக்க முடியாமை, சமுதாயக் கடமைகளை நிறைவேற்ற இயலாமை, இயல்பான வாழ்க்கையாகி விடுகின்றது. இறுதியில் உயிரையே பறித்து விடுகின்றது.

**போதையில் மாட்டிய ஒருவர்:**

10 ஆண்டுகளாக மதுக்குடித்து குடித்து ஒருவர் மதுநோயாளியாகி கல்லீரல் புற்றுநோயினால் அவதிப்படுகின்றார். அவருக்கு மருத்துவமனைக்கே பல ஆயிரம் ரூபாய் விரயம் ஆகின்றது. அவரால் எந்த வருமானமும் இல்லை. மனைவி கணவரின் குடியினால் மனநோயாளியாகவே ஆகிவிட்டார். 2 பிள்ளைகளையும் வளர்க்க முடியாததால் ஒரு ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தங்குவதற்கு சரியான வீடு இல்லை. உணவிற்கு போதுமான வசதியில்லை. இப்படிப்பட்டச் சூழ்நிலையில் இவரின் குடியால் அரசுக்குக் கிடைத்த மற்றும் கிடைக்கும் வருமானமென்ன? அவரின் குடும்பத்திற்கான பாதிப்புகள் என்ன? அவரின் குடிக்குப் பணம் தேவைப்படுகிறது. அவரின் மருத்துவச் செலவுக்கு பணம் தேவைப்படுகின்றது. அவரின் மனைவியின் மனநல

மருத்துவத்திற்கு பணம் தேவைப்படுகின்றது. குழந்தைகளைப் பராமரிப்பதற்கு பணம் தேவைப்படுகிறது. அடிப்படைத் தேவைகளுக்கான பணம் தேவைப்படுகின்றது. ஏன் பாதுகாப்பாகத் தங்கியிருக்க ஒரு வீடுகட்ட பணம் தேவைப்படுகின்றது. இந்த எல்லா பணத்தேவைகளையும் அவர் குடிக்காமலிருந்தால், குடிக்குச் சிகிச்சை எடுத்து நிறுத்தியிருந்தால், மற்ற எல்லா கணவர்களைப் போல இவரும் எல்லாத் தேவைகளையும் பொறுப்பாகக் கவனித்திருக்க முடியும். ஆனால் குடி அவரை மட்டுமல்ல ஒட்டுமொத்தக் குடும்பத்தையே அடிசாய்த்துவிட்டது.

**போதை வருமானமா? அவமானமா?**:

போதையால் வருவதை வருமானம் என்று சொல்வதை விட அவமானம் என்று சொல்லலாம். அரசு சொல்கிறது "மதுக்கடைகளை மூடினால் மக்களுக்கு இலவசங்களைச் செய்ய முடியாது". அரசு மதுக்கடைகளை மூடினாலே இலவசங்களே தேவைப்படாது. ஏனென்றால் பல குடும்பத் தலைவர்களின் வருமானம் முழுவதும் மதுவியிலேயே கரைந்து விடுவதனால்தான் குடும்பங்களுக்கு அரசின் இலவசங்கள் தேவைப்படுகின்றன. 1983-ல் டாஸ்மாக்கின் வருமானம் வெறும் 183 கோடியாக இருந்தது. 2002-2003-ல் ரூ. 2,82,809 வருமானமாக மாறியது. கடந்த 2023-ம் ஆண்டு லாபம் மட்டும் ரூ. 45,85,567 கோடி. இது 2022-ம் ஆண்டைவிட ரூ. 1,73,454 கோடி அதிகம்;. இப்போது ஒருநாள் டாஸ்மாக்கின் விற்பனை மட்டும் சராசரியாக ரூ. 120 கோடி. அப்படி பார்க்கும்போது 1983-லிருந்து 2024 ஆண்டுக்குள் குடிப்பவரின் எண்ணிக்கை எவ்வளவு அதிகரித்துள்ளது என்பதை நினைக்கும்போது நமக்குத் தலைச்சுற்றுகின்றது. மதுபான தயாரிப்பு, வரி விற்பனை வழியாக அரசுக்கு கிடைக்கும் தொகைப் பெரிதாகத் தெரிகின்றது. ஆனால், மதுபானம் குடிப்பவர்களால் அரசுக்கு வருமானத்தைவிட பன்மடங்கு செலவு ஏற்படுகின்றது என்பதுதான் உண்மை.

ஒருநாட்டின் முன்னேற்றம் என்பது மதுதொழிற்சாலைகளும், மதுக்கடைகளும், மதுபார்களும் அல்ல. மக்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படுவதாகும். எத்தனைத் திட்டங்கள் தீட்டினாலும், எத்தனை இலவசங்கள் கொடுத்தாலும் மதுவை அரசு விலக்காமல் மக்களின் வாழ்வு மேம்படப் போவதில்லை. எனவே நாட்டில் முழு மதுவிலக்கை அமல்படுத்தவது கட்டாயத் தேவையாக இருக்கின்றது.

**நிறைவாக**:

"நல்லதோர் வீணை செய்தே அதை நலன்கெட புழுதியில் எறிவாருண்டோ?" இல்லை. ஆனால் போதை அப்படித்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மதுக்கடைகளை முழுவதுமாக மூடினால்தான், போதைப்பொருட்கள் புழங்குகிறதை முழுமையாகக் கட்டுப்படுத்தினால்தான், நமது அழகிய மானிட சமுதாயத்தை காக்க, பாதுகாக்க முடியும். சமுதாயத்தின் வேர்களையே சிதைத்து, மக்களை வாழ்வின் கனிகளைச் சுவைக்கச் செய்யாமல் அவதிக்குள்ளாக்கும், அவதிப்படுத்தும் மதுபோதையை நமது சமுதாயத்திலிருந்து முழுவதுமாக விரட்ட வேண்டும். மக்களின் வாழ்வு மரம் வேரோட்டம் பெற்று செழித்து வளர்ந்து, மகிழ்ச்சி, அன்பு, நிறைவு, அமைதி போன்ற கனிகளைக் கொடுக்க நாம் சமூக மாற்றத்திற்காய் குரல் கொடுப்பவர்களாக மட்டுமல்லாமல், கரம் கோர்ப்பவர்களாகவும் இணைவோம்.

இன்று அருட்பணியாளர் ஜேம்ஸ் தோம்பர் நம்முடன் உயிருடன் இருந்திருந்தால் நமது சமுதாயத்தை மிகவும் தேவையான போதைசார் பணிகளாகிய போதைத்தடுப்பு, போதைத்தவிர்ப்பு, போதைவிலக்கு, போதைவிழிப்புணர்வு, போதைச்சிகிச்சை பணிகளைத்தான் தனது முதன்மைப் பணியாகச் செய்திருப்பார்.

**சிந்தனைத் துளிகள்**

நேர்மையும், கருணையும், மனித நேயத்தையும் வளர்க்க தன்னை அர்ப்பணிப்பதும் பிறரை அர்ப்பணிக்க தூண்டுவதுதான் ஆன்மீகத்தின் பணி.

# எனது அனுபவங்களில் வெள்ளைக்கார சாமி



தொகுப்பு :
திரு. **ஜோசப் சேவியர்** (பரக்குன்று)

ஜேம்ஸ் தொம்பர் எனும் முழுப்பெயரே எனக்கு நீண்ட காலத்துக்குப் பிறகு தான் தெரியும். அது வரை நம்ம வெள்ளக்கார சாமி. என்பது மட்டுமே அவருக்கான அடையாளம். அவருக்கான அன்பு இன்றும் முதுமை முக்காடு போர்த்திய கிராமத்து மக்கள் யாரிடம் கேட்டாலும், வெள்ளக்கார சாமியா என எழுந்து நிற்பார்கள். இந்த மண்ணில் அவர் விட்டுச் சென்ற தடம் அத்தனை அழுத்தமானது. மக்களின் இதயங்களில் அவர் பதித்துச் சென்ற வரலாற்றுச் சுவடு அத்தனை வலிமையானது.

ஏழை மக்களோடு என்னை இணைத்துக்கொள்ளவும், அவர்களில் ஒருவனாக வாழ்ந்து இயேசுவின் அன்பை வெளிக்காட்டவும். படைப்பு அனைத்தும் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு புதுப்படைப்பாக மாற வேண்டும் எனும் உண்மையை விளக்கவுமே நான் இந்தியா வந்தேன் அதுவே கிறிஸ்துவின் பொதுக் குருத்துவம் என்கிறார் தந்தையவர்கள்.

எனது தந்தை சிறுவயது முதலே வெள்ளக்கார சாமியோடு இணைந்தே திரிந்தவர் அவர். நல்லாயன்புரம் ஆர்.சி. பள்ளிக்கூடத்தில் அவர் ஆசிரியராக இருந்தார். பெரும்பாலான நேரங்களில் தந்தையவர்களுடன் தான் சுற்றிக் திரிவார். அப்பாவுக்கு வேலை வாங்கிக் கொடுத்ததே தந்தையவர்கள் தான்.

எனது அம்மா, சமீபத்தில் தான் இறையடி சேர்ந்தார். தனது எண்பத்து இரண்டாவது வயது வரை அவருடைய வாய் ஓயாமல் வெள்ளக்கார சாமியின் கதைகளை நெகிழ்வாகவும், மகிழ்வாகவும் பதிவு செய்து கொண்டே தான் இருந்தது. மலையடி பள்ளியில் ஆசிரியராக இருந்தார் அம்மா. அந்த வேலையும் தந்தையவர்கள் கொடுத்த வேலை தான்.

அம்மாவும், அப்பாவும் சொல்கின்ற கதைகளின் வழியாக தந்தையவர்களைப் பற்றிய மிகப்பெரிய பிம்பம் எனக்குள் கட்டமைக்கப்பட்டிருந்தது. குறிப்பாக தந்தையவர்களின் இளகிய மனம் குறித்த கதைகள் எப்போது கேட்டாலும் கண்களில் கண்ணீர் கசியும்.

அம்மா பள்ளிக்கூடம் செல்லும் வழியில் மலையடிவாரத்தில் ஒரு குடிசை உண்டு. அந்தக் குடிசையில் பனையேற்றுத் தொழில் செய்கின்ற ஒருவர் வீட்டில் ஏழுபேர் உண்டு. உள்ளே படுக்கக் கூட வசதியில்லை. மழைக்காலத்தில் தண்ணீருக்குள் தான் வீடு இருக்கும். அம்மா மதிய உணவுக்காக எடுத்துச் செல்லும் உணவு பல வேளைகளில் அந்தக் குடும்பத்திலுள்ள ஏதோ ஒருவரின் பசியாற்றும்.

அவர்களுக்கு ஒரு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என அம்மாவுக்கு ஆசை. தந்தையவர்களிடம் வருகிறார் எப்படியாவது அவர்களுக்கு உதவுங்கள் என மனு கொடுக்கிறார். இப்படியெல்லாம் மனுவோட வராதீங்க... நிறைய குடும்பங்கள் இங்கேயே இருக்கு என்கிறார் தந்தை. நீங்க எப்படியாவது உதவி பண்ணணும் என அம்மா பிடிவாதம் பிடிக்கிறார். நீங்களே உங்க சம்பளத்துல உதவி பண்ணுங்க என்கிறார் தந்தை. அதை நான் கண்டிப்பா பண்றேன். ஆனா வீடு கட்டிக் கொடுக்கக் கூடிய அளவுக்கு என்கிட்டே ஒண்ணும் இல்லை. நீங்க தான் எப்படியாவது உதவி பண்ணணும் என அம்மா அங்கேயே நிற்கிறார். சரி பாக்கிறேன்.. என அம்மாவை அனுப்பி வைக்கிறார்.

பின் அவராகவே அந்த வீட்டைத் தேடிக் கண்டுபிடித்துச் செல்கிறார். அந்த வீட்டின் ஏழ்மை நிலை அவரை நிலைகுலைய வைக்கிறது. ஆனாலும் அந்த வீட்டில் நிலவிய மகிழ்ச்சியும் அன்பும் அவரை நெகிழ வைக்கிறது. உடனே அம்மாவை அழைக்கிறார். வீடு கட்டிக் குடுக்கலாம்... நீங்க நின்னு பாத்துக்கோங்க என்கிறார். நீங்க உதவி பண்ணுவீங்கன்னு தெரியும் ஃபாதர் என அம்மா சிரிக்கிறார். அந்த சிரிப்பின் வழியே கண்களிலிருந்து ஆனந்தக்

கண்ணீர் வடிகிறது. இன்றைக்கு அந்தப் பகுதியில் அந்தக் குடும்பத்திலுள்ளவர்கள் எல்லாரும் பெரியவர்களாகி, அவர்கள் பிள்ளைகளுக்கும் திருமணமாகி, பேரன் பேத்திகளுடன் பெரிய பெரிய வீடுகளுடன், தொழில்களுடன் மிகச் சிறப்பாக இருக்கிறார்கள். இன்றைய இந்த நிலைக்கு தந்தையவர்களின் அன்றைய கனிந்த இதயமே அடிப்படை.

இப்படி ஏராளமான கதைகளை அம்மா சொல்லிக் கொண்டே இருப்பார். நோயாய் இருப்பவர்களுக்கு மருத்துவ உதவிகள் செய்வது. வீடு கட்டிக் கொடுப்பது. கூரை வேய உதவி செய்வது, வேலை வாங்கிக் கொடுப்பது. வருமானத்துக்கு வழி செய்வது என அவருடைய பணிகளைப் பற்றி அம்மா சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று மட்டுமே தோன்றும். எத்தனையோ பங்குத் தந்தையர் கடந்து சென்றாலும், ஜேம்ஸ் தொம்பர் அடிகளாரின் இருப்பு சற்றும் அசைக்க முடியாததாய் இருப்பதற்குக் காரணம் அவர் நற்செய்தியை வாழ்ந்து காட்டியிருக்கிறார் என்பது தான்.

பல நகைச்சுவைக் கதைகளையும் அப்பா சொல்வார். ஒரு முறை கோயில் கட்டும் பணி நடந்து கொண்டிருந்தது. அன்று மாலை தந்தையவர்கள் மக்களிடம் கேட்டார். ‘உங்களுக்கு கோதம்பு வேணுமா, தேங்க் யூ வேணுமா’ என்று மக்கள் உள்ளுக்குள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். டெல்லி கோதம்பு தான் கிட்டுது, இந்நு நாம அந்த தேக்ங்யூ வேணும்ன்னு கேப்பம்டே.. என முடிவெடுக்கிறார்கள். ஃபாதர் அந்த தேங்குயூ குடுங்க என்கிறார்கள். அவர் சிரித்துக் கொண்டே... தேங்க்யூ தேங்க்யூ என சொல்லி விட்டுச் சென்று விடுகிறார். கூட்டம் விழித்துப் பார்க்கிறது. அப்போது மொழிபெயர்ப்புக்காக வந்திருந்த சகோதரி ஒருவர் அங்கே இருந்தார் அவர் சொன்னார். “ஆமா, கோதுமை வேணுமா நன்றி வேணுமான்னு ஃபாதர் கேட்டாரு, நீங்க நன்றி போதும்ன்னு சொன்னீங்க.. தேங்க்யூ ந்னா நன்றின்னு அர்த்தம் என சிரித்தார். மக்கள் முகத்தில் ஈயாடவில்லை. ஆனாலும் தந்தைக்குத் தெரியும் மக்களுடைய தேவை, எனவே பின்னாலேயே அவர்களுக்குத் தேவையான தானியங்களையும் கொடுக்கிறார்.

தந்தையவர்களின் பண்புகளில் மிகவும் பளிச் என தெரிவது அவரது மனித நேயக் குணம் தான். பிறருக்கு ஒரு தேவை என்றால் உடனே கசிந்துருகி விடுவார். தன்னால் எல்லோருக்கும் உதவி செய்ய முடியாது என்பதும் அவருக்கு தெரியும். அன்னை தெரசாவைப் போல ஏழைகளில் பரம ஏழைகளுக்காய் அவரது பணி எப்போதுமே இருந்தது. ஒரு மனிதனுக்கு மீனைக் கொடுப்பதை விட தூண்டிலைக் கொடுங்கள் என்றொரு பழமொழி உண்டு. தந்தையவர்கள் சற்று வித்தியாசமானவர், முதலில் மீனைக் கொடுப்பார். தெம்பு வந்தபின் தூண்டிலைக் கொடுப்பார். தூண்டில் போட்டு மீன் பிடிக்கக் கற்றுத் தருவார். பிடித்த மீன்களை எப்படி விற்பது என்பதைச் சொல்லித் தருவார். அந்த பணத்தை எப்படி நல்ல விதத்தில் செலவிடுவது என பழக்குவார்.

பனைமரம் அதிகமாக இருந்த ஊரில் பனை மரத்தைக் கொண்டு என்னென்ன செய்ய முடியும் என்பதை யோசித்துச் செயல்படுத்தினார். அது கருப்பட்டி செய்வது, பனங்கற்கண்டு செய்வது, பனம் தும்பு ஆலை, ஓலை முடைவது என நீண்டு கொண்டே இருந்தது. பனையோடு வாழ்ந்த மக்களுக்கு, பனையே ஒரு புதையல் என்பதைப் புரிய வைத்தவர் அவர்தான்.

கடற்கரை ஓரமான கிராமங்களில் சென்றால் மீன்களை வைத்து என்ன செய்யலாம் என யோசிப்பார். மீனவர்களுடைய வாழ்க்கை வளர என்ன செய்யலாம் என சிந்தித்து செயல்படுத்துவார். அப்படித் தான் மீனவ கிராமங்கள் முன்னேறின.

நல்ல களிமண் கிடைக்கக் கூடிய பகுதியெனில், அதை வைத்து என்ன செய்யலாம் என யோசிப்பார். அப்படித் தான் பாண்டங்கள் செய்கின்ற வேலைகளை உருவாக்கினார்.

தந்தை முன்னெடுத்த இன்னொரு முக்கியமான பணி கல்விப்பணி. பெரியவர்கள் வேலைக்குச் செல்லும் போது பிள்ளைகளை ஒன்று கூட்டி பாடம் சொல்லிக் கொடுப்பது அவரது சிந்தனையில் இருந்தது.

பிள்ளைகளை பள்ளிக்கு வர வைக்க வேண்டுமெனில் அவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். காலை உணவு, மதிய உணவு எனும் சிந்தனைகளையெல்லாம் உலகம் கண்டு பிடிக்கும் முன் செயல்படுத்தியது தந்தையவர்கள் தான். பரக்குன்று, மேல்பாலை போன்ற பள்ளிக்கூடங்களிலெல்லாம் இன்று மிகவும் நல்ல பெயருடனும் புகழுடனும் இருப்பதற்கு அவர் போட்ட விதையே காரணம்.

தந்தையவர்கள் சுங்கான்கடைக்குச் சென்ற பின் அவரது முதுமைக் காலத்தில் அவருடைய இடத்துக்குச் சென்று, அவர் நடத்திய திருப்பலி ஒன்றைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பத்து பதினைந்து பேர் சுற்றி வட்டமாக அமர்ந்திருக்க, அந்த வட்டத்தில் ஒருவராய் அமர்ந்து தந்தையவர்கள் திருப்பலி நடத்தினார். அப்பமும் இரசமும் அப்படியே சுற்றி வந்தன. அதெல்லாம் அப்போது மிகவும் வியப்புக்குரிய ஒரு செயலாக இருந்தது.

மக்களைப் பார்த்து திருப்பலி நிறைவேற்றும் வழக்கம் இல்லாத வத்திக்கான் அறிவுரைக்கு முன்பே அவர் கட்டிய ஆலயங்களில் பீடங்கள் மக்களைப் பார்த்து திருப்பலி நிறைவேற்றும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன என்பது ஒன்றே போதும் அவரது தொலைநோக்குப் பார்வையின் ஆழத்தையும், அவருக்கு இறைவன் கொடுத்த வெளிப்பாடுகளின் தன்மையையும் புரிந்து கொள்ள.

தமிழகத்திலும், இந்தியாவிலும் நற்செய்தி அறிவிக்க வந்த பண்டைய இறையியலார்கள் மண்ணுக்கேற்ற வகையில் தங்களை மாற்றிக் கொண்டு தான் நற்செய்தி அறிவித்தனர். காவி உடுத்தி நற்செய்தி அறிவித்தனர். தங்கப் பூணூல் போட்ட படி நற்செய்தி அறிவித்தனர் என பல கதைகளை நாம் படிக்கலாம். ஜோசப் பெஸ்கி போன்றவரின் வரலாறுகளெல்லாம் நம்மை வியப்பில் அழ்துகின்றன. தந்தையவர்கள் அத்தகைய முன்னுதாரணங்களை தன் வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டிருந்தார். அன்னிய மண்ணில் இறைவனை தொழவேண்டுமெனில் அவர்களுடைய வழக்கத்திற்குள் சென்று இதயத்தில் மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்று சிந்தித்தார். இந்த நாட்டின் பண்பாடு, கலாச்சாரம் முறையை அரவணைத்தார்.

இன்றைக்கு பலரும் அடையாளங்களை மாற்றுவதில் காட்டும் ஆர்வத்தை இதயங்களை மாற்றுவதில் காட்டுவதில்லை. நீ மூழ்கி திருமுழுக்கு எடுத்தாயா, நீ வெள்ளை ஆடை உடுத்தினாயா என விவாதிக்கும் அளவுக்கு நீ மனித நேய செயல்களில் ஈடுபட்டாயா? என கேட்பதில்லை. மக்களுக்கு ஆடலும் பாடலும் துதித்தலும் குதித்தலும் எளிதாய் இருக்கிறது. ஆனால் மனித நேயப் பணிகள் கடினமாய் இருக்கின்றன. தந்தையவர்கள் அடையாளங்களைப் பற்றி அலட்டிக் கொள்ளவே இல்லை. அவர் கட்டிய ஆலயங்களைப்பார்த்தாலே அந்த வேறுபாடு பளிச் என தெரியும்.

இன்றைக்கும் மும்மதத்தின் கூறுகளையும் உள்ளடக்கிய பரக்குன்று ஆலயமும், நல்லாயன்புரம் ஆலயமும் பார்ப்போர் கண்களை விரியச் செய்யுமளவுக்கு நிமிர்ந்து நிற்கின்றன. திருச்சபை என்பது இறைமக்களின் கூடுகை தான். அது கட்டிடம் அல்ல. இந்த அடிப்படைப் புரிதல் தந்தையிடம் இருந்தது. இந்த ஆலயங்களுக்கு இப்போது புதிதாய் வருகின்றவர்கள் வியந்து பேசுகின்ற அளவுக்கு அவரது கலை நயப் பார்வை இருந்திருக்கிறது.

எல்லாவற்றுக்கும் முன் கடவுள் ஓம் எனும் ஓசையில் அடங்கியிருந்தார். ஆதியிலே அசைவாடிக்கொண்டிருந்த ஆவியில் ஓம் எனும் வார்த்தை அடக்கும். ஓம், எல்லா மதங்களையும், சாதிகளையும், கோட்பாடு களையும் கடந்து. கடவுள் முன் எல்லோரும் சமம் என்பதன் அடையாளம் ஓம், ஆமென் என்பதன் அடையாளம் ஓம், என இந்திய ஓம் எனும் மந்திர ஓசையை தந்தையவர்கள் விளக்குகிறார். மிகவும் பரந்த மனமுடைய, இறை இயல்புகளை முழுமையாய் உள்வாங்கிய ஒருவரால் தான் இப்படி சமத்துவ சிந்தனையுடன் பேச முடியும்.

தந்தையவர்களின் செப வாழ்க்கை ஆழமானது. செபம் என்பது தன்னையும்

பிறரையும் உலகையும் கடவுளின் கண்கொண்டு காணும் அனுபவம் என்கிறார் அவர். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும் எனது விசுவாசத்தை நானே தேடிச் சென்றேன். எனக்கும் கடவுளுக்குமான அன்புறவு உருவானபோது இறையியல் கோட்பாடுகள் எல்லாம் இரண்டாம் பட்சமாகி விட்டன. என் விசுவாசம் இயேசுவை மையமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டது. என் தினசரி வாழ்வில் நான் இயேசுவை உணரத் தொடங்கினேன். செபம் என்பது இயேசுவின் வழியாய் விண்ணகத் தந்தையை அடையும் வழி என்பதை உணர்ந்தேன். செபம் என்பது என்னிலும், பிறரிலும் இறை பிரசன்னத்தை உணர்வது. அதற்கு பேசுவதை விட செவிமடுத்தலே முக்கியம். ஒவ்வொரு சூழலிலும் இயேசு என்ன செய்வார் என்பதைக் கேட்டு செயல்பட வேண்டும் என ஆன்மீகத்தின் மையத்தை மிகத் தெளிவாக விளக்குகிறார்.

கிறிஸ்தவ ஒழுங்குகளையும், சில புரட்சிகரமான கேள்விகளையும் கூட அவர் வெளிப்படையாகவே பதிவு செய்கிறார். கடவுள் ஆணாகவும், பெண்ணாகவும் இல்லை. பின் ஏன் விண்ணகத் தந்தை ஆணாய் இருக்கிறார்? ஏன் விண்ணகத் தாயாய் இல்லை? கடவுள் என்பவர் உண்மையில் அன்பின் வடிவமல்லவா? என்றெல்லாம் தனது சிந்தனைகளை தந்தையவர்கள் எழுதுகிறார். கூடவே, பாவங்களைப் பட்டியலிடும் அருட்சாதனத்தை அவர் விரும்பவில்லை. இறைவன் நம் இதயத்தை அறிகிறார். நம் பாவங்களைத் தோண்டியெடுத்து குற்ற உணர்வில் வாழ்வது தேவையில்லை. நானாக இல்லாத அனைத்தையும் மன்னித்து. மறந்து விடும் என இறைவனிடம் செபிக்க வேண்டும். இறைவன் விரும்பியதைச் செய்யாமல், விரும்பாததைச் செய்கின்ற நிலையை மாற்ற வேண்டும் என்கிறார்.

இறைவார்த்தைகளையும் மிகவும் எதார்த்தமாகப் புரிந்து கொண்டவர் தந்தையவர்கள். நற்கருணை என்பதே நற்செய்தி அறிவித்தல் தான். இறைவனின் வார்த்தைகள் பழங்கால விளக்கங்களோடு நின்று விடக்கூடாது. அவை இன்றைய சூழலுக்கேற்ற வாசகமாய் மாறி நம்மை இயக்க வேண்டும். இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்டதைப் பிறரோடு பகிரும் ஆனந்த அனுபவமாய் வாழ்க்கை மாற வேண்டும். அதுவே திருவிருந்து, அதுவே நற்செய்தி அறிவித்தல். என தந்தையவர்களின் பார்வை மிகவும் வித்தியாசமானது. தந்தையவர்கள் பரக்குன்று ஆலயம் கட்டுகின்ற கால கட்டத்தில் மிகவும் வலிமை வாய்ந்தவராய் இருந்தார் என அம்மா சொல்வார்கள். ஊரிலுள்ள மக்கள் சிலர் ஒன்றாக ஒரு கல்லைப் புரட்ட முயன்று கொண்டிருக்கும் போது, தந்தை தனி ஆளாக ஒரு கல்லைத் தூக்கி தோளில் வைத்து அதை தூரமாய்க் கொண்டு போடுவார் என்றும், வேலை முடியும் வரை கூடவே நின்று வேலை செய்து கொண்டிருப்பார் என்றும் அம்மா அடிக்கடி சொல்வார்.

அந்த தந்தையவர்கள் கடைசி காலத்தில் நோய்வாய்பட்டார். பார்கின்சன் அவரை பிடித்துக் கொண்டது. உடல் மூளையின் கட்டுப்பாட்டை விட்டு விலகிச் சென்று கொண்டிருந்தது. மூளையின் செயல்பாடுகளை இயல்பாக்கவே அவருக்கு மருந்துகள் தேவைப்பட்டன. டோப்பமின் செயல்பாடுகள் நின்று போக, செயற்கை மருந்துகளே அந்தப் பணிகளைச் செய்ய முயன்றன. அந்த காலத்தில் தந்தையவர்களைத் தாங்கிப் பிடித்தது திருப்பாடல்கள் 36 தான். கடவுளின் இரக்கம் பெரியது என்றும், அவரே கரம்பிடித்து அழைத்துச் செல்கிறார் என்றும் தந்தையவர்கள் ஆறுதல் அடைந்தார்கள்.

தனது கடைசி கால கடிதம் ஒன்றில் தந்தை இப்படி எழுதினார், எனது உடல் திருமலை ஆசிரம சிற்றாலயத்தின் எதிரே பூமித்தாயின் உடலுக்குள் உறங்கச் செல்லும். பாதையின் இறுதியை நான் அடைவேன். என்னைத் தூய்மைப்படுத்தி விடுவிக்கும் பேரொளியை நிச்சயம் காண்பேன்.

தந்தையவர்கள் விண்ணில் இறைவனின் பந்தியில் வீற்றிருக்கிறார்கள். பரக்குன்று மண்ணிலிருந்து விடைபெற்றுக் கொண்டிருக்கின்ற முதியவர்கள் விண்ணகம் செல்லும்போது அவர்களை அன்புடன் அரவணைக்கவும், வரவேற்கவும் அவரது புனித கரம் ஆவலாய்க் காத்திருக்கிறது.

# கடவுளின் கரங்களால் வழிநடத்தப்பட்ட ஓர் அருள்பணியாளர்

தொகுப்பு : அருட்பணி. **மேரி ஜாண்**
வெட்டுவெந்தி

"கடவுளின் கரங்களால் வழிநடத்தப் பட்ட ..." என்பது இந்தக் கட்டுரையின் நாயகனான, நினைவில் வாழும், அருள்பணி. ஜேம்ஸ் தொம்பர் அவர்கள் தம் பணிபற்றி ஆங்கிலத்தில் எழுதிய ஒரு சிறு நூலின் தலைப்பு ஆகும்.

என் சிறு வயது முதல் அவரைக் கண்டும், அவரைப்பற்றிக் கேள்விப்பட்டும், அவர் நிகழ்த்திய வழிபாடுகளில் பங்கெடுத்தும், அவரோடு உரையாடியும், அவர் எழுதிய கடிதங்களைப் படித்தும் கிடைத்த நீண்ட அனுபவம் மனதில் ஆழமாகப் பதிந்தது, மறக்க இயலாதது.

பரக்குன்று பங்கின் அருள்பணியாளராகவே தொடக்கத்தில் அவரைப் கண்டிருக்கிறேன். அதன் பிறகு படிப்படியாக ஓர் அருள்நெறியாளரை, ஒரு மானிட நேயரை, ஓர் ஏழைக் பங்காளரை, ஒரு சீர்திருத்தக்காரரை, ஒரு பண்பாட்டாளரை, ஒரு கல்வியாளரை, ஒரு சமூகப் பணியாளரை அவரில் காண முடிந்தது. இவை அனைத்தையும் பற்றி இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டால் கட்டுரை நீண்டு போக வாய்ப்பு உள்ளதால் மற்றவர்கள் ஒருவேளை அதிகம் அறியாத சில தகவல்களை மட்டும் இங்கு குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

முதலில் நினைவுக்கு வருவது பரக்குன்று கோவில். அது கட்டப்பட்டுக் கொண்டிந்த போது நான் ஒரு சிறுவன். அதன் அர்ச்சிப்பு விழாவுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தச் சிறு வயதிலும் நான் கண்டு பிரமிப்படைந்த ஒன்று அந்தக் கேவிலின் தூண்களில் இருந்த அலங்காரங்கள். அவற்றின் பொருள் என்ன என்று புரியாவிட்டாலும் அவை என் கவனத்தை ஈர்த்தன. அவர் எழுதிய நூலைப் படித்த பிறகுதான் தெரிந்தது – அவை இந்திய, குறிப்பாகத் திராவிடப் பண்பாட்டு அடையாளங்கள் என்று! இன்றும் விழா வரவேற்பு வாசல்களில் கட்டப்படுகிற வாழைக் குலைகள்தாம் அந்தத் தூண்களில் காணப்படுபவை என்று!!

மும்பையிலிருந்து வெளியாகும் தி எக்சாமினர் (The Examiner) என்ற ஆங்கிலக் கத்தோலிக்க இதழின் 1927 அக்டோபர் 22 என்ற தேதியிட்ட இதழ்பகுதியில், 501 ஆம் தொடர்பக்கத்தில் ஒரு தரை வரைபடத்தைக் காணலாம். மிகவும் அறியப்பட்ட தொல்லியல் ஆய்வாளரும் வரலாற்று ஆசிரியருமான அருள்பணி. ஹென்றி ஹேரஸ் என்பவருடைய படைப்பு அது. இந்தியமயமாக்கலை அப்போதே முன்மொழிந்துவந்த ஒரு பேராசிரியர் அவர். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அவர் இயேசுசபை மறைப்பணியாளராக மும்பை, புனித சேவியர் கல்லூரியில் பணியாற்றியவர். (இந்திய அரசு அவரைச் சிறப்பிக்கும் விதத்தில் அஞ்சல்தலை ஒன்று வெளியிட்டது குறிப்பிடத்தக்கதாகும்).

அவர் படைத்த அந்தக் தரை வரைபடத்தில் காணப்பட்ட அம்சங்கள், கோவிலின் முன்பக்கத்தில் அமைக்கப் பெற்றுள்ள தெப்பக்குளம் உட்பட, அனைத்தும் பரக்குன்று கோவில் அமைப்புக்கும் பொருந்துகின்றன. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் பண்பாட்டுமயமாக்கல் பற்றிய கருத்துக்கள் அலசப்பட்ட தருணத்தில் பண்பாட்டு கூறுகளோடு முதலில் எழுந்த தென்னிந்தியக் கத்தோலிக்கப் பங்குக் கோவில் இதுவாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது. கத்தோலிக்கக் கலைக்களஞ்சியத்தின் (The Catholic Encylopaedia) பழைய பதிப்பு ஒன்றில் " இந்தியா" என்ற கட்டுரையில் தரப்பட்டுள்ள புகைப்படம் பரக்குன்று கோவிலுடையது ஆகும்.

மேல்பாலையில் இருந்த பழைய கோவிலிலும் திராவிடக் கட்டிடக் கலையின் கூறுகள் உள்ளன என்று அருள்பணி. ஜேம்ஸ் அவர்கள் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். அதனை நினைவில் கொண்டுதான் புதிய கோவிலிலும் அந்தக் கூறுகள் அமைந்துள்ளன. அதனை அமைத்த பங்கு நிர்வாகமும் அப்போதைய பங்கு

அருள்பணியாளரும் பாராட்டுக்குரியவர்கள்.

மேலும் நல்லாயன்புரத்தில் அருள்பணி. ஜேம்ஸ் அவர்கள் அமைத்த கோவிலும் இந்தியக் கலை வடிவத்தைக் கொண்டதாகும். முகப்பில் பெரிய கோபுரத்துடன், வெளிச் சுற்று சுவரால் பாதுகாக்கப்பெற்ற உள்பகுதியில், சுவர் இல்லாக் கோவிலாய் இருந்த அது பல உட்பொருள்களைக் கொண்டதாய் இருந்தது.

இந்தக் கட்டிட வேலைகளில் எல்லாம் அவரோடு ஒத்துழைத்த கலையறிஞர் ஜோதி சாகி என்பவராகும். அவருடைய கலைவடிவ இந்தியமயமாக்கலுக்கு ஒருவேளை அருள்பணி. ஜேம்ஸ் அவர்கள் தூண்டுதலாய் இருந்திருக்கலாம். அல்லது ஒத்த சிந்தனை கொண்ட இருவருடைய சந்திப்பு இத்தகைய புதுமனைகளை ஆற்றியிருக்கலாம்.

இன்று நம் பங்குகளில் நிகழ்த்தப்படும் பல அருள்வாழ்வுச் செயல்களை அப்போதே தொடங்கிவைத்தவர் அருள்பணி. ஜேம்ஸ் அவர்கள். குறிப்பாக, அவருடைய காலத்தில் பரக்குன்று பங்கின் கத்தோலிக்க சேவா சங்கம் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அதனை அங்கு தொடங்கியவர் யார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவருடைய காலத்தில் அந்த சங்கம் வழியாகப் பல அர்ப்பணமுள்ள பொதுநிலையினரை அவர் உருவாக்கினர். ஆண்டுதோறும் பங்கு மக்களுக்காக மூன்று நாள் தியானத்தைப் பங்கில் நிகழ்த்தியவர் அவர். அதில் அனைவரும் பங்கெடுக்கத் தூண்டினார்.

அடுத்து நான் நினைவுகூரப்போவது அவருடைய பன்முகத் தன்மையுள்ள மானிட நேயச் செயல்களை, பிள்ளைகளின் கல்விக்காகவும் ஆசிரியர்களின் வேலைவாய்ப்புக்காகவும் அவர் தொடங்கிய கல்வி நிலையங்கள், படிப்பறிவு அதிகம் இல்லாத எளிய மக்களுக்காகப் பரக்குன்று, முட்டம் முதலிய பகுதிகளில் அவர் நிறுவிய தொழில்கள் முதலியவை யாவரும் அறிந்தவையே. தொழிலாளர்களின் நலனை முன் வைத்து அவர் கொண்டிருந்த நிலைப்பாடுகள் ஒருவேளை அதிகம் பேசப்படாதவையாய் இருக்கலாம். அத்தகைய ஒரு நிகழ்வை இங்கு பகிர்ந்து கொள்ள விளைகின்றேன்.

பரக்குன்று பங்கிலிருந்து விடைபெற்றுச் சென்ற பிறகும் அவருடைய முயற்சியால் ஆக்கம் பெற்ற கோட்டாறு சமூக சேவை சங்கத்தைக் கண்காணிக்கும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. அவருக்குப் பிறகு பரக்குன்று பங்கு அருள்பணியாளர்களாக வந்த சிலர் பரக்குன்று தொழிலகங்களின் இயக்குநர்களாகவும், தொடர்ந்து கோட்டாறு சமூக சேவை சங்கத்தின் இயக்குநர்களாகவும் நியமனம் பெற்றிருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஒருமுறை சில பணியாளர்களைப் பணிநீக்கம் செய்யவும் வேறு சில பணியாளர்களுடைய ஊதியத்தைக் குறைக்கவும் முயன்றார். ஒருவேளை நிதித் தட்டுபாடு காரணமாய் இருக்கலாம். இதனால் பாதிக்கப்பட்ட பணியாளர்கள் முறையீடு செய்ய, இறுதியில் அது அருள்பணி. ஜேம்ஸ் தொம்பர் அவர்களின் பார்வைக்கு வந்தது. இதற்காகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் அருள் பணி.ஜேம்ஸ் அவர்களின் தீர்ப்பு இப்படி இருந்தது. "தகுந்த காரணம் இல்லாமல் எந்தக் குற்றச்சாட்டும் இல்லாத யாரையும் பணிநீக்கம் செய்வதோ யாருக்கும் ஊதியம் குறைப்பதோ கூடாது." அப்படி சில ஏழைப் பணியாளர்களுடைய பணியுரிமை அன்று காப்பாற்றப்பட்டது.

அவருடைய மனித நேயத்தையும் ஏழைகளின் விடுதலைத் தாக்கத்தையும் ஆழ்ந்து உணரும் தருணம் எனக்கு ஒருமுறை வாய்த்தது. மூன்றாண்டுகள் வெளிநாட்டில் சென்று படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்த நேரத்தில் அருள்பணி. ஜேம்ஸ் தொம்பர் அவர்களுடன் அவ்வப்போது கடிதத் தொடர்பு வைத்திருந்தேன்.

ஒவ்வொரு முறையும் அவரும் தட்டச்சில் பதில் எழுதி அனுப்புவார். ஒரு கடிதத்தில் அவர் எழுதிய கருத்து இது: "பல நாட்டு மக்களுடன் பழகும் வாய்ப்பு உனக்குக் கிடைத்திருக்கிறது. இதனை நன்கு பயன்படுத்து. மூன்றாம் உலக நாட்டு மக்களுடன், குறிப்பாகத் தென் அமெரிக்கா, மக்களுடன் அதிகமாக பழக முயற்சி செய்." மூன்றாம் உலக நாடு என்பது வட அமெரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா தவிர்த்த பிற ஏழைகள் தாம் மிகவும் பாதிக்கப்பட்ட,

வஞ்சிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்தவர்கள். ஏழை மக்களுக்கான விடுதலை இறையியல் முதலில் தோன்றி வளர்த்ததும் அங்குதான். முதல் உலகம் எனப்படுகிற ஐரோப்பிய நாடான பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒருவராகிய அருள்பணி. ஜேம்ஸ் அவர்களின் வழிகாட்டல் அது. அவர் இறையியல் பேசினாரா என்று தெரியாது. ஆனால் விடுதலை இறையியலைத் தமக்கே உரிய பாணியில் செயல்படுத்தினார் என்பது கண்கூடு.

இயேசுவின் வழிநின்று சிந்திக்கும், செயல்படும் இறைவாக்கினர்கள் அவ்வப்போது தோன்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

“எல்லாருக்கும் நல்வாழ்வு, எல்லாரோடும் நல்லுறவு” என்ற இறையாட்சி இலக்குடன் செயல்பட்ட ஓர் இறைவாக்கினர் அருள்பணி. ஜேம்ஸ் தொம்பர் அவர்கள்.

அவருடைய சமகாலத்தில் பெல்ஜியம் நாட்டு மறைப்பணியாளர்கள் வேறு இருவரும் (அருள்பணி. மெலார்டு அவர்களும் அருள்பணி.ஜிலே அவர்களும்) கோட்டாறு மறைமாவட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அந்த இருவரும் தங்கள் நாடுகளுக்குத் திருப்பிச் செல்லத் தருணம் வாய்ந்தது. ஆனால் அருள்பணி. ஜேம்ஸ் அவர்களின் விடைபெறல் இந்த மண்ணிலேயே நிகழ்ந்து, அவருடைய உயிர் இறைவனை அடைந்து, உடல் இந்த மண்ணிலேயே இளைப்பாறுகிறது.

அவருடைய நினைவு நம்மை ஆட்கொள்கிறது. இயேசுவின் உயிர்ப்பில் அவர் பங்கெடுத்துள்ளதற்கு அவருடைய நீங்கா நினைவு சான்றாய் அமைகிறது.

**சிந்தனைத் துளிகள்**

நீங்கள் உண்மையான கிறிஸ்தவர் என்பதற்கான உரைகல், நீங்கள் யாரோடு ஒத்துப்போகிறீர்கள் என்பதயும், உங்களை விமர்சனம் செய்பவர் யார் என்பதயும், உங்களை ஏற்றுக் கொள்ளாதவர் யார் என்பதயும், உங்களை அதிகமாகப் புகழ்வது யார் என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள். நாம் உழைப்பாளிகள்; தலைமை பொறியாளர் அல்ல. நாம் பணியாளர்கள்; மெசியாக்கள் அல்ல.

## தேன் சிட்டுப் பதில்கள்

அன்பான வாசகர்களே,

புதிய தேடலில் வெளிவரும் தேன் சிட்டுப் பதில்கள் என்னும் கேள்வி பதில் பகுதிக்கு உங்கள் கேள்விகளை புதிய தேடல் அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

* கடவுளது சாயலாகப் படைக்கப்பட்டவர்கள் எத்தகைய இயல்பை அணிந்து கொள்ள வேண்டும்? **(பர்ணபாஸ், சுங்கான்கடை)**

புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ள வேண்டும். அவ்வியல்பு உண்மையான நீதியிலும், தூய்மையிலும் வெளிப்படும் (எபே.4:24)

* இயேசுவை எங்கே காணலாம்? **(றோஸ்மேரி, ஆளூர்)**

அவரது சாயலாக வாழும் ஏழைகள், கைவிடப்பட்டோர், பார்வையற்றோர், ஒடுக்கப்பட்டோர் போன்றோரின் மகிழ்வான சிரிப்பில் காணலாம்.

* நட்டாலம் புனித தேவசகாயம் திருத்தலத்தின் சிறப்பம்சங்கள் பற்றி சொல்லலாமா? **(அருள்ஜேம்ஸ், சென்னை)**

புனித தேவசகாயம் பிறந்த வீடும், அவரும் அவரது குடும்பத்தினரும் தண்ணீர் அருந்திய கிணறும், பிறந்த மண்ணில் முதல் முதலில் அவர் செபித்த செபத்தோட்டமும் இன்றும் அங்குள்ளது.

* ஒரே கடவுள் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் தானே?

அப்படியல்ல, உலகிலுள்ள மனுக்குலத்தோர் அனைவருக்குமே ஒரே கடவுள்தான்

* தேன் சிட்டே மானிடரில் குற்றமற்ற ஒருவரை காட்ட முடியுமா? **(அபிலாஷ், தையாலுமூடு)**

தம்பி, உங்களைக் காட்ட விரும்புகிறேன். அதற்கு நீங்க ரெடியா?

* சில நேரங்களில் சில நிகழ்வுகள் எம்மை சிறுமைப்படுத்துகின்றனவே? **(சுனில்குமார், நெல்வேலி)**

சில நேரங்களில் சில நிகழ்வுகள் மனிதர்களை சிறுமைப்படுத்தினாலும் அதை ஏற்று தாங்கிக் கொள்வதே விவேகம். வீதியில் கையில் குடையில்லாமல் நடந்து செல்லும் போது திடீர் மழை பெய்தால் நனைவதைத் தவிர்க்க முடியாது.

# ஜேம்ஸ் தொம்பர் என்றொரு சமூகச்சிற்பி



**- குமரி ஆதவன்**

ஒவ்வொரு மனிதனும் ஏதோவொரு தேவைக்காகத் தான் பிறக்கிறான். அந்த நோக்கம் அவன் வாழும் சமூகத்தால் நிறைவெய்துகிறது. உருவாக்குதல் சிறப்பாக இருந்தால், அந்த மனிதன் சக மனிதர்களுக்கும் இந்த உலகத்திற்கும் பயன்படுபவனாக மாறுகிறான். சிறுவயதில் பெற்றோர்கள் தாம், கண் முன்னால் வாழும் வாழ்க்கை மாதிரிகள், அவர்களிடமிருந்து மரபு ரீதியாகவும், பார்த்துப் அதைபோலச்செய்தல் மூலமாகவும் குழந்தைகள் கற்றுக் கொள்கின்றனர். மயிலுக்கு போர்வை தந்தவனும், முல்லைக்குத் தேர் தந்தவனும் இப்படி உருவாக்கப்பட்டவர்கள் தான்.

ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு துறைகளிலும், அவ்வப்போது ஆச்சரியமாய் விடிவெள்ளிகள் உருவானது உண்டு. அந்த விடிவெள்ளிகள் தங்கள் பணியாலும், தியாகத்தாலும் காலத்தால் அழிக்க முடியாதபடி தங்கள் பெயரை இறைவனின் பேரேட்டில் எழுதிச் செல்கின்றனர். அப்படி எழுதப்பட்ட பெயரில் ஒன்று தான் ஜேம்ஸ் தொம்பர்.

பெல்ஜியம் நாட்டில் ஆகஸ்ட் 29, 1924 அன்று ஏழைப் பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாக பிறந்தவர் ஜேம்ஸ் தொம்பர். வறுமை கற்றுத் தருகிற பாடத்தை இந்த உலகத்தில் வேறு எந்த அனுபவமும் கற்றுத்தராது. குழந்தைப் பருவம் முதலே பெற்றோரின் வறுமையைப் பார்த்தும், அதன் விளையாட்டு நகர்வுகளை அனுபவித்தும் வாழ்ந்தவர் ஜேம்ஸ்தொம்பர். ஆற்றுக்குள் விழுந்தவன் எப்படியாவது தப்பிவிட எத்தனித்து மேலெழும்புவது போல், வறுமைக்கு வாழ்க்கைப் பட்டவர்கள் பெருமுயற்சி மேற்கொள்வதும், அதிலிருந்து தப்பித்து வெளியே வர சிந்தனை பூர்வமாக யோசிப்பதும் இயல்பு. அதனால்தான் கவிஞர் தமிழன்பன், சிறகினை இழந்த பறவையும், சிந்தனை இழந்த சமூகமும் மேல்நோக்கிச் செல்வதில்லை என்கிறார்.

மிகப்பெரும் மனிதர்களின் சிந்தனைகள் தாம், தனி மனித மற்றும் பல்வேறு பொதுச் சிக்கல்களுக்கு தீர்வுகளைத் தந்துள்ளன. அவை அரசியல் மற்றும் சமூக விடுதலையையும் தந்துள்ளன. வளரும் பருவத்திலேயே உலகின் வறுமைக்குக் காரணம் என்ன என்று சிந்திக்கத் தொடங்கிய ஜேம்ஸ் தொம்பர், அதற்கான த

தீர்வுகளையும் கண்டறிந்தார். தனது குடும்பத்து வறுமைக்கு காரணம் என்னவோ, அதுதான் உலகத்து ஏழைகளின் துன்பத்துக்கு காரணம் என எண்ணினார். ஏழை எளியவர்கள் மீது இரக்கம் கொண்டு, ஒரு மாற்றுச் சமூகத்தை அமைக்க பாடுபட்ட இயேசுவின் வாழ்வு ஜேம்ஸ் தொம்பரை ஏழைகளின் விடிவெள்ளியாக வாழத் தூண்டியிருக்க வேண்டும். தனது சிந்தனை உருவாக்கிய அறிவு விதைகளை எங்கே கொண்டு விதைப்பது? அதற்கான களம் எது? என யோசித்தார். தனது அறிவின் ஆழத்தை அதிகப்படுத்தவும், ஞானத்தின் வெளிச்சத்தை விரிவு படுத்தவும் தேவையான களம் எதுவென்று கண்டறிந்தவர். தூது பணியின் துணையாளர் சபையில் சேர்ந்து குருவாக பயிற்சி பெற்றார்.

1949 ஜூலை 17 அன்று குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தனது பணி வாழ்வின் திட்டங்களைச் செயலாக்க எந்த நாட்டுக்குப் போவது என்று யோசிக்கிறார். மக்கள் நெருக்கத்திலும் வறுமையிலும் தள்ளாடிய சீனாவா? இந்தியாவா? என்கிற போராட்டத்தில் சீனாவை முதலில் தேர்வு செய்தாலும், இறைவனின் சித்தம் இந்தியாவாக இருந்தது. கோட்டாறு மறை மாவட்டத்தின் அன்பு அழைப்பு அவரை இந்தியா நோக்கி பயணிக்கச் செய்தது. 1950 ஆகஸ்ட் 16 அன்று, இந்திய மண்ணில் புரட்சியாளர் கால் பட்டது. ஒன்பது மாதங்கள் கோட்டாறு ஆயர் இல்லத்தில் தங்கி தமிழ் படித்தவர். முளகுமூடு பங்கிற்கு உதவி குருவாக வந்தார். ஓராண்டு பணிக்குப் பின் செறுவெல்லூர் கிராமத்திற்குக் குருவாக அனுப்பப்பட்டார்.

சமூகப்பணி செய்ய ஆவலாய் பறந்த ஜேம்ஸ் தொம்பருக்கு பெருந்தீனி போட்டது

பரக்குன்றுதான். நெசவு மையத்தைத் தொடர்ந்து பனச்சீனி ஆலையை மிகப்பெரும் அளவில், மேனாட்டுத் தொழிற்கருவிகளோடு ஆரம்பித்தார். இதில் ஏராளம் பெண்கள் வேலை செய்து தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொண்டார்கள். அதோடு பனை ஏறுவதற்கு கருவியை அன்றே கண்டறிந்துள்ளார். ஆனால் மக்கள் அதை அதிகமாகப் பயன்படுத்தவில்லை. அதுபோன்று பனம்தும்பு ஆலை ஆயத்த ஆடை உருவாக்கும் மையம், மரம் அறுத்துக் கொடுக்கும் அறுவை ஆலை, வீடுகளுக்கான மர சாமான்கள் என பல தொழிற்கூடங்களை உருவாக்கி மேற்குப் பகுதி மக்களுக்கெல்லாம் வேலை கிடைக்கச் செய்துள்ளார்.

உருவாக்கிய பணத்தை எப்படிச் சேமிப்பது என்று தெரியாமல் செலவாளிகளாக இருந்த மக்களுக்குச் சிறு சேமிப்புத் திட்டத்தை உருவாக்கி சேமிப்பதற்குக் கற்றுக் கொடுத்தார். சிறு சதவீதம் குழந்தைகளே பள்ளிக்குச் சென்று வந்த அந்த காலத்தில், அத்தனை குழந்தைகளும் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார். கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, பள்ளிச் செல்லும் குழந்தைகளின் சதவீதத்தை அதிகப்படுத்தினார். பரக்குன்று மக்கள் கடவுளை வணங்குவதற்காக ஒரு மாதா கோவிலைக் கட்டினார். கத்தோலிக்க சேவா சங்கம் என்ற அமைப்பை பரக்குன்றில் உருவாக்கியதும் அவர்தான்.

இருபது ஆண்டுகள் பரக்குன்று பகுதியில் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக பணி செய்து கொண்டிருந்த ஜேம்ஸ் தொம்பர் அடிகளாருக்கு கட்டுமானப் பணிகளைப் பார்வையிடுவதற்காக வெளிநாட்டிலிருந்து பொறியாளர் ஒருவர் வருகை தந்திருந்தார். அவர் கடலில் குளிப்பதில் விருப்பமாக இருந்ததால், முட்டம் பகுதிக்கு அவரை அழைத்துச்சென்றார். அங்கு சென்றபோதுதான் முட்டம் பகுதியில் வாழுகிற மீனவர்களின் வறுமை, உழைப்பதை சேமிக்கத் தெரியாத தன்மை, பலரால் அவர்கள் சுரண்டப்படுகிற கொடுமை, இவற்றையெல்லாம் பார்த்து உள்ளம் குமுறி முட்டத்தில் தனது அடுத்தக்கட்டப் பணியை ஆரம்பித்தார்.

ஜேம்ஸ் தொம்பர் கடலோரத்தில் கணக்கில்லா சமூகப் பணிகளைச் செய்தார் எனலாம். முதலில் மீனவர்களுக்கு இடையே ஒற்றுமையையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்த முயன்றார். அவர்களுக்கெல்லாம் வாழ்வாதார புரட்சி ஏற்பட தொழில் நுட்ப மாற்றங்களை உருவாக்கினார். படகை நீண்ட கால உழைப்போடு கூடிய நைலான் வலைகள், ரப்பர் படகு போன்றவற்றை பாண்டிச்சேரியில் செய்து இங்கு கொண்டு வந்து மீனவர்களுக்கு வழங்கி மீன்பிடித்தலின் பணிச்சுமையைக் குறைத்தார். முதலில் 100 விசை இயந்திரங்களை கொண்டு வந்தார். பின்னர் முட்டத்தில் விசை இயந்திரம் மற்றும் பைபர் படகுகளை உற்பத்தி செய்யும் தொழிற்கூடத்தை உருவாக்கினார். இன்று இது பேணப்படாமல் சேதமடைந்து உள்ளது.

ஐ.நா. சபையின் உணவு மேலாண்மைக் கழகம் மூலம், பசி விடுதலை இயக்கத்தை ஆஸ்திரியாவின் காரிதாஸ் நிறுவனத்தைப் பொறுப்பேற்கச் செய்து முட்டம் கடற்கரைக்குக் கொண்டு வந்தார். பிரஞ்சு நாட்டு செனட் சபை உறுப்பினர் கிளேரோ மூலம் டோரிஸ் படகுகளை பெற்றுக் கொடுத்தார். இலங்கையிலிருந்து கண்ணாடி இழைப் படகுகள் இறக்குமதி செய்தார். இதனால் மீன்பிடித்தல் அதிகரித்தது. மீனவர்கள் பொருளாதாரத்தில் சுயசார்படைந்தார்கள்.

பொருளாதாரத்தை வீணாக மக்கள் செயலவழித்துத் தீர்ப்பதைக் கண்ட ஜேம்ஸ் தொம்பர் 1974-இல் மணக்குடி, குறும்பனை, இனையம் ஆகிய ஊர்களில் மீனவர் சங்கங்களை ஏற்படுத்தினார். இதன் மூலம் சேமிப்புப் பழக்கத்தையும் உருவாக்கினார். இது மீனவர்களைச் சுரண்டி வாழ்ந்த வட்டிக்கடைகாரர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. எதிர்ப்புகள் வந்த போதும், மக்கள் முன்னேற்றப் பணிகளில் முன்னோக்கியே சென்று கொண்டிருந்தார் ஜேம்ஸ் தொம்பர்.

1971 -இல் இந்திய பெல்ஜியம் மீன் பிடித்தல் திட்டத்தை உருவாக்கினார். எர்ணாகுளத்தில் இருந்து போர்ட் செய்யும் நிபுணர்களை அழைத்து வந்து முட்டம் மக்களுக்குப் பயிற்சி கொடுத்தார். 25 அடி

மற்றும் 32 அடி நீளம் கொண்ட போட்டுகள் தயாரிக்கப்பட்டன. குறைந்த செலவில் பைபர் வளங்களையும் உருவாக்கினார். மீனவப் பெண்களும் உழைத்தால் தான், சமூக மதிப்பை பெற முடியும் என்பதில் உறுதியாக இருந்தார் ஜேம்ஸ் தொம்பர் அதை நிஜமாக்கியும் காட்டினார். 13 ஊர்களில் நைலான் வலைப்பின்னல் தொழில் மையத்தை உருவாக்கி, சுமார் 1200 பெண்களை வேலையில் ஈடுபட வைத்து உயர் வருமானம் பெற வைத்ததோடு, தங்கள் சொந்த காலில் நிற்கவும், சொந்தத் தேவைகளுக்காக ஆண்களிடம் கையேந்தாமல் தாங்களே நிறைவேற்றிக் கொள்ளவும் வழிவகை செய்தார்.

கடலோர பணிகளில் ஓரளவுக்கு நிறைவு கண்ட ஜேம்ஸ் தொம்பர் சுங்கான் கடை பகுதிக்கு இடம் பெயர்ந்தார். சமூகப் பணியாளர்களுக்கு, பாதிக்கப்பட்டு கிடக்கும் மனிதர்களின் முகம் தான் கண்ணில் தெரியும். அப்படித்தான் சுங்கான்கடை பகுதியில் வாழ்ந்த மண்பாண்ட தொழிலாளர்கள் கண்ணில் பட்டனர். உணவு சமைக்கும் மண்பாண்டப் பாத்திரங்கள் செய்து தரும் ஏழை மனிதர்கள், உணவு இல்லாமல் தவிப்பதையும், மொத்த வியாபாரிகளால் ஏமாற்றப்படுவதையும் கண்ட ஜேம்ஸ் தொம்பர் அவர்கள், கொஞ்சகாலச் சமூகப்பணியை இவர்களுக்காக செய்ய முடிவு செய்தார். எவராலும் கவனிக்கப்படாத அவர்களது கண்ணீரைக் கண்டார். குடிசை வீடுகளையும், பள்ளிக்கூடம் செல்லாத பிள்ளைகளின் அவல நிலையையும் கண்டு, அவர் மனம் துயரம் கொண்டது. வட்டிக்கு வட்டிக்கட்டும் அவர்களது கடன் சுமையைக் குறைப்பது இயேசுவின் சிலுவை பாதையில் பங்கெடுப்பது என கருதினார். அடிக்கடி சென்று அவர்களோடு பேசினார். எவருக்கும் மதத்தைச் சொல்லவில்லை. வாழ்வதற்கான மாற்றுப் பாதையைக் காட்டினார்.

பொருளாதார வளர்ச்சியில் பெண்களையும் பங்கேற்க செய்ய விரும்பிய ஜேம்ஸ் தொம்பர், அவர்களையும் இத்தொழிலில் விற்பனை மற்றும் உருவாக்குதல் பணியில் ஈடுபடச் செய்தார். குறிப்பாக இவர்களது தெருக்களில் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தி அதிலும் வெற்றி கண்டார். மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தார். அதற்கான கடன்களை சிறு தவணை மூலம் கட்டித் தீர்க்க வழிவகை செய்தார். இந்த மக்கள் அவர் உருவத்தை கருங்கல்லில் செதுக்கி எல்லோரும் பார்க்கும் வண்ணம் சுங்கான்கடைப் பகுதியில் வைத்து அவரது தியாகத்தை நன்றியோடு நினைத்து வருகிறார்கள்.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த அருட்பணியாளர் ஜேம்ஸ்தொம்பர், மக்களும் இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும் என்று விரும்பினார். பெல்ஜியம் நாட்டு அருட்சகோதரி காட்லீவ் வண்டேவாலே அவர்களுடன் இணைந்து சுங்கான்கடை திருமலையில் இயற்கை முழுநல வாழ்வு மையம் தொடங்கினார். இங்கு 27 வகையான இயற்கை முறை சிகிச்சைகள், 34 வகையான இயற்கை உணவு மற்றும் மருந்து பொருட்கள் இன்றும் கிடைக்கின்றன. ஆயர் அஞ்சுசாமி மூலம் சுங்கான்கடையில் 100 ஏக்கர் மலையை மருத்துவர் சீதாராமனிடமிருந்து விலைக்கு வாங்க வைத்தார். இங்கேயே திருமலை ஆசிரமத்தை நிறுவி கடைசி வரை வாழ்ந்தார். 2002 அக்டோபர் 10 அன்று அவர் மண்ணுலகம் விட்டு பிரியும் வரை மக்களையும் இயற்கையையும் நேசித்து, இயேசுவின் சீடராக வாழ்ந்தார். மிகப்பெரும் காரியங்களை உருவாக்கிக் காட்டினார்.

நூற்பு நெசவுமையம், சர்க்கரை ஆலை, பனைத்தும்பு ஆலை, பனைநார் தொழில், பால் உற்பத்தி மையம், பனைத்தொழிலாளர் கூட்டுறவு சங்கம், விவசாயச் சங்கங்கள், கல்வி கூடங்கள் என இவர் சாதித்தது ஏராளம். மகளிர் மன்றங்கள், குழந்தைகளுக்கான மருத்துவ விடுதிகள் என எண்ணற்ற பணிகளை செய்த ஜேம்ஸ்தொம்பர் என்றென்றைக்கும் ஒரு சமூகச்சிற்பியாய் நம் நினைவில் வாழ்வார். மாவட்டம் முழுவதும் களப்பணி செய்தபோது, அவர் செய்துள்ள பணிகளுக்காக எத்தனைப் புனிதர் பட்டங்கள் கொடுத்தாலும் தகும் என நான் கருகிறேன்.

# தொம்பரின் கனவுகள் தொடரட்டும்!



அருள்பணி. **வெ. மரிய அல்போன்ஸ்**

## கீழிருந்து மேல் நோக்கும் மாற்றம்

அருட்பணி ஜேம்ஸ் தொம்பர் இன்று வரலாறாகக் கொண்டாடப்படுகிறார். படைப்பாற்றலுடன் தமது பணியைத் தொடர விரும்பும் அருட்பணியாளர்களுக்கு அவர் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு. இரண்டாம் வத்திக்கான் சங்கம் தன் மறுமலர்ச்சி சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் பிரபலப்படுத்துவதற்கு முன்பே தந்தை ஜேம்ஸ் தொம்பர் தொலைநோக்குடன் பணியாற்றினார் என்பதுதான் வரலாறு.

பாரம்பரிய அணுகுமுறைகளையும் பார்வையையும் புறந்தள்ளிய பெருமை தொம்பர் தந்தையின் சிறப்பு. பனை மரம் ஏறியவர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள், கல் உடைப்பவர்கள், கற்றாழை நார் தயாரிப்பவர்கள், பனைப் பாளையிருந்து தும்பு உரித்தவர்கள், விவசாயக் கூலிகள் சார்பாக அவர் எடுத்த சார்பும் காட்டிய கரிசனையும் மிகப் பெரியது. இன்று அவரது வாழ்நாள் சாதனைகளைக் கொண்டாடுவது எளிது. ஆனால், அவரைப் பின்பற்றி மறுமலர்ச்சிக்கான முன்முயற்சிகளை மேற்கொள்பவர் எண்ணிக்கை அரிது. வளர்ச்சிப் பணிகளையும் மறுமலர்ச்சிக்கான முதன்முயற்சிகளையும் முழுவீச்சுடன் செயல்படுத்த விளைவதுதான் அருட்பணி ஜேம்ஸ் தொம்பர் அவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன். அவரது வாழ்க்கையை வாசிப்பதும் மறுவாசிப்பு செய்வதும் கோட்டாறு மாவட்டங்கள் செய்யத் தகுந்த ஆன்மீகப் பயிற்சி.

மாற்றங்கள் மேலிருந்து வருவதில்லை. கீழிருந்து மேலாகப் பரவுகின்றன மாற்றங்கள். தொடக்கத்தில் தப்பறைகளாகக் கருதப்பட்டவைதான் பிற்காலத்தில் மறுமலர்ச்சியின் முதன்மைக் கூறுகளாக ஏற்கப்பட்டுள்ளன. வரலாறு முழுவதிலும் இதை நாம் வாசிக்கிறோம். குறிப்பாக, அருட்பணியாளர்களின் பணியும் வாழ்வும் தொடர்பான பல சிந்தனைகளும் செயல் நிலைப்பாடுகளும் இவ்வாறுதான் நிகழ்ந்துள்ளன. இன்னும் குறிப்பாக, அருட்பணியாளர்களின் பயிற்சியில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்களை எடுத்துக்காட்டலாம். இங்குதான் ஜேம்ஸ தொம்பர் அவர்களின் பயிற்சியையும் இதனால் அவருக்குள் எழுந்த நற்செய்திப் பணி ஆர்வத்தையும் புரிந்துகொள்கிறோம்.

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிந்தைய காலத்தில், பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் நாடுகளில் தோன்றியது "உழைக்கும் அருட்பணியாளர்கள்" (Worker-Priests Movement) இயக்கம் இந்த இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளிலும் மிகவும் பிரபலமாகச் செயல்பட்ட உழைக்கும் அருட்பணியாளர் இயக்கம் கோட்டாறு மறைமாவட்டத்தில் பணியாற்ற வந்த அருட்பணியாளர்கள் ஜேம்ஸ், ஜிலே, மெலார்ட் போன்றவர்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். மக்களோடு நெருங்கிப் பழகவும் அவர்களோடு உழைத்து அவர்களைப் புரிந்து கொள்ளவும் தோன்றிய இந்த அருட்பணியாளர் இயக்கத்தின் அருட்பணிப் பார்வையும் திட்டமும் அருட்பணி ஜேம்ஸ் அவர்களிலும் மறுமலர்ச்சிக்கான விதைகளை ஊன்றியிருக்க வேண்டும்.

## மறுமலர்ச்சியே மையம்!

மறுமலர்ச்சியை மையப்படுத்தின அருட்பணி ஜேம்ஸ் தொம்பர் அவர்களின் எளிய வாழ்வு. காவி கட்டிய வெள்ளைக்காரர் அவர்! அவரது காலத்தில் இத்தகைய மாற்றம் எதிர்ப்பிற்கும் நகைப்பிற்கும் உள்ளானது என்பதை நாம் நினைவில் நிறுத்துவது நல்லது. பாரம்பரியமான பணி முறையையும் வழிபாட்டுச் சடங்குகளையும் கடைப்பிடித்த அருட்பணியாளர்களுக்கும் இறைமக்களுக்கும் நடுவில், ஒற்றை ஆளாகத் தனித்துப் பயணித்த துணிவை நாம் தொழுவது தகும். திருஅவை ஓர் இறுக்கமான நிறுவனம் அல்ல, அன்பினால் கட்டி எழுப்பப்பட வேண்டிய ஓர் இயக்கம் என்பதை முழுமையாக ஏற்றிருந்தது அவரது இதயம். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வழிபாட்டு மாற்றங்களை கோட்டாறு மறைமாவட்ட மக்களிடம் எடுத்துச் சென்ற

பெருமை பேரருட்பணி வில்லவராயர் மற்றும் பேரருட்பணி பிரான்சிஸ் இருவரையும் சாரும். அதேவேளை, மறுமலர்ச்சி சிந்தனைகளை வாழ்வுநிலைக்கும் அமைப்புநிலைக்கும் எடுத்துச் சென்ற பெருமை அருட்பணி ஜேம்ஸ் அவர்களையே சாரும் என்பது மிகை அல்ல. அதிகாரமும் மதிப்பும் பெற்றுத்தந்த அருட்பணி ஆடைகள் தவிர்த்து எளிய உடைக்கு மாற வேண்டுமெனில் இறையாட்சித் தெளிவும் இறைப்பணித் தொண்டருக்கான அர்ப்பண உறவும் அடிப்படை. அவை அருட்தந்தை தொம்பெரிடம் இருந்தன. இதை அருட்பணியாளர்களும் இறைமக்களும் இன்றும் உள்வாங்குதல் இன்றியமையாதது. தேக்கம் இல்லாத் திருஅவையாக நாம் எதிர்நோக்குடன் பயணிக்க மாற்றத்திற்கான தெளிவும் ஈடுபாடும் உடனடித் தேவைகள்.

## தாயகமாக்கும் தனிப் பண்பு

வழிபாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் வழிபாட்டுத் தலங்களில் தலவளங்களுக்கு ஏற்ப மாற்றங்களை இணைத்துக் கொள்வதற்கு இறையியல் தெளிவு அடிப்படையானது. இதை தந்தையிடம் பிரமிக்கத் தகுந்த அளவில் காண்கிறோம். மேல்பாலை, பரக்குன்று, நல்லாயன்புரம், ஐக்கியநகர் பங்குத் தளங்களில் அவர் எழுப்பியுள்ள ஆலயங்கள் இதன் பிரதிப்பலிப்புகள். தற்போது இந்த ஆலயங்கள் பல மாற்றங்களுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றின் பழைய வடிவங்கள் தமிழ்நாட்டின் இந்து சமய ஆலயங்களின் பாரம்பரிய அடையாளங்களை உள்ளடக்கியவை. முகப்புகளிலிருந்து பீடங்கள், தலைவாசல்களிருந்து சன்னல் திறப்புகள், திருப்பண்டட அறைகள், நற்கருணைப் பேழைகள் யாவும் தலத்தின் கலாச்சாரக் கூறுகளைப் பிரதிபலிப்பவை. இவ்வாறு தாயகமாக்கும் தனிபெரும் இறையியல் பண்பு இன்று அருகிவிட்டது. ஆனால், தந்தை தொம்பர் தனிக் கவனத்துடன் இத்தகைய ஆலயங்களை வடிவமைத்து எழுப்பியுள்ளது நமக்கு ஒரு சவால்.

இன்றும் பல கோடிகளில் கோவில்களைக் கட்டுகிறோம். புறத் தோற்றம் பெறுகிறது முழுக்கவனம்! உட்புகுந்து உற்றுப் பார்த்தால் "ஆஹா!" என பிரமிப்பூட்டும் எதுவும் இல்லை. இந்த ஆலயம் மற்ற ஆலயங்களிருந்து வேறுபட்டது எனச் சொல்லக் கொள்ள கலைநயம், இறையியல் வடிவங்கள், மறையுண்மைச் சித்திரங்கள், மறைப் போதனை உருவங்கள் எதுவும் நம்மைக் கவர்ந்து ஈர்ப்பதும் இல்லை. கம்பி, காரை, கற்கள், கலவை இவற்றால் எழும்புவதில்லை ஆலயம்! கலை நயமும் இறை உணர்வை உருவாக்கும் வடிவமைப்பும் ஓர் ஆலயத்தை இன்னோர் ஆலயத்திருந்து வேறுபடுத்திக் காட்டும். அத்தகைய நுணுக்கங்கள் ஏதுமின்றி வெறும் கூடாரங்களாக அழகும் அடையாளமும் இழந்து நிற்கும் இன்றைய பிரமாண்ட ஆலயங்களுக்குப் பிரமிப்புத் தருகின்றன அருட்பணி ஜேம்ஸ் அவர்களின் கவினுறு கோயில்கள்.

## அர்ப்பணம் மிகுந்த ஆன்மீகம்

கோவில்களோடு நின்றுவிடாதது அவரது அர்ப்பணம் மற்றும் ஆன்மீகம். இரண்டாம் வத்திக்கான் சங்கம் எடுத்துரைத்ததுபோன்று, மனிதரின் ஏக்கங்களோடு இணைந்து நின்றது அவரது பணி ஆர்வம், இலக்கு, ஈடுபாடு: "மகிழ்வும், எதிர்நோக்கும் ஏக்கமும், கவலையும், இன்றைய மனிதரின் வாழ்வில் குறிப்பாக, ஏழைகள் மற்றும் துன்புறுவோர் அனைவரின் வாழ்வில் உள்ளன. இம்மனிதரின் மகிழ்வும் எதிர்நோக்கும், ஏக்கமும் கவலையும் கிறிஸ்தவர்க்கும் முற்றிலும் உரியனவே; கிறிஸ்துவைப் பின்பற்றும் இவர்களின் இதயத்தில் உண்மையான மனிதக் கூறுகள் யாவும் எதிரொலிக்கத்தான் செய்கின்றன. ஏனெனில் கிறிஸ்துவில் ஒருமிக்கப்பெற்று, தந்தையின் ஆட்சியை நாடிச் செல்லும் பயணத்திலே தூய ஆவியால் வழிநடத்தப் பெறுபவர்களும், மனிதர் அனைவருக்கும் அறிவிக்கப்பட வேண்டிய மீட்பின் செய்தியைப் பெற்றவர்களுமான மனிதர்களால் ஆகியதே கிறிஸ்தவ சமூகம். எனவேதான், கிறிஸ்தவ சமூகம், மனித குலத்தோடும் மனித குல வரலாற்றோடும் உண்மையிலே தான் நெருங்கி இணைக்கப் பெற்றுள்ளது என்பதை உணர்கின்றது" (இன்றைய உலகில் திருஅவை, எண்: 01).

## கனவுகள் தொடரட்டும்!

ஜேம்ஸ் தொம்பர் தந்தையின் கனவுகளைத் தொடர்வது அவருக்கு நாம் ஆற்றும் அழியாத அஞ்சலி. புதியதைக் கனவு காண்பவர்கள் இன்று குறைவு. புதிய வானமும் புதிய வையகமும் வடிவமைக்கும் கனவுச் சிற்பிகளுக்கு இன்று ஏற்பட்டுள்ளது பஞ்சம்! உரோமையில் ஒரு கனவுச் சிற்பி – திருத்தந்தை பிரான்சிஸ் – தனித்து விடப்பட்டுள்ளார். ஒருவேளை அருட்பணி ஜேம்ஸ் அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் வாழும் இக்காலத்தில் வாழ்ந்திருந்தால், இமாலயச் சாதனைகளைச் செய்திருக்கலாம். கோட்டாறு – குழித்துறை திருஅவைகளுக்கு இன்னும் ஒரு புதிய முகமும் வடிவமும் தந்திருக்கலாம்.

சிறுசேமிப்பு, மக்கள் குழுக்கள், தோழமை இயக்கங்கள், தொண்டு நிறுவனங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள், விற்பனை அங்காடிகள், ஆன்மீக ஆசிரமம் என திருஅவைக்குள் திருப்பங்களை உருவாக்கியிருக்கலாம் தந்தை ஜேம்ஸ் தொம்பர். வாழும் காலம் யாவருக்குமே குறுகியது. ஆனால், ‘‘காலத்தின் குறிகளைத் துளாவி அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் கட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருஅவையின் கடமை’’ (இன்றைய உலகில் திருஅவை, எண்: 04) என்பதை உணர்ந்து கனவுகளுடன் பணி ஆற்றும் எவரும் காலத்தை வெல்லும் கதாநாயகர்களே. அவ்வகையில் அருட்பணி ஜேம்ஸ் தொம்பர் அவர்களும் காலத்தால் அழியாத கதாநாயகன்தான்.

‘‘பயணிப்போம் அவர் காட்டிய பாதையில்,
பணியாற்றுவோம் அவரது தடங்களில்’’

அடுத்த இதழ் **(புனிதர்களின் பாதையில்)** என்றச் சிந்தனையில் மலர இருக்கின்றது. உங்களது படைப்புகள், கவிதை, கட்டுரை, கதை, துணுக்குகள், சிந்தனைகளை 30-10-2024-ம் தேதிக்குள் புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறந்தப் படைப்புகள் இதழில் வெளியிடப்படும்.

**ஆசிரியர்**
**புதிய தேடல்**

## ஆயரின் அலுவல்கள்: அக்டோபர் 2024

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 13 | Contact Visit & Feast Mass | Kanjiracode | 09.00 am |
| 13-18 | Retreat | Trivandrum | |
| 19 | Chapel Blessing | Padappachai | 11.00 am |
| 20 | Contact Visit & Confirmation Mass | Padarnilam | 09.00 am |
| 27 | Contact Visit & Confirmation Mass | Nallayanpuram | 09.00am |
| 30 | District level Annual Day/Kolping | Fathimanagar, Amsi | 10.30 am |
| 31 | Grotto Blessing | Vencode | 06.00 pm |

## 01. கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு மறைக்கல்வி பணிக்குழு

* 14.09.2024 - முளகுமூடு, காரங்காடு, 15.09.2024 - வேங்கோடு, 21.09.2024- மாத்திரவிளை, 28.09.2024 - புத்தன்கடை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன. பொதுக்குழுக்களில் மறைவட்ட முதன்மை பணியாளர்கள், மறைவட்ட இயக்குநர்கள் உட்பட 43, 61,67,27 என்ற எண்ணிக்கைகளில் மறையாசிரியர்கள் பங்கேற்றனர்.

- முளகுமூடு, காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் மறைக்கல்வி ஆசிரியர்கள் குழந்தைகளிடம் எப்படி நம்பிக்கையை ஆழப்படுத்துவது, இன்றைய உலகில் திருஅவை ஆகிய சிந்தனைகளில். டாக்டர். டால்பின் ராஜா, அருள்பணி. ஜிஜோ ஆகியோர்கள் பயிற்சிகள் வழங்கினார்கள்.

* 14.09.2024 - திரித்துவபுரம் மறைவட்ட செயற்குழு கூட்டமானது மறைவட்ட முதன்மை அருள்பணியாளர் ஒய்சிலின் சேவியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 13 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

* 24.09.2024 - திருச்சி திருத்தொண்டர்களுக்கு மறைமாவட்ட பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் அருள்பணி என். மார்ட்டின் அவர்களின் தலைமையில் மேய்ப்புபணி பயிற்சி அரங்கில் வைத்து மறைமாவட்ட இயக்குநர் அருள்பணி. வி. பெனிட்டோ அவர்களால் மறைக்கல்வி, திருவழிபாடு, விவிலியம் ஆகிய பணிக்குழுக்களின் பணிகள் குறித்துப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

* மறையாசிரியர்களுக்கான அடிப்படை மறை பயிற்சியானது (BTCT) செப்டம்பர் மாதம் முழுவதும் நடைபெற்றன. விவிலியம் ஓர் அறிமுகம், அடிப்படை செபங்கள், வழிபாடு, துணை கருவிகள் தயாரிப்பு, மாணாக்கர் உளவியல், நற்பழக்கங்கள், கிறிஸ்தியல், ஊடக பயன்பாடு ஆகிய தலைப்புகளில் அருள்பணியாளர்கள் எட்வின் ராஜ், காட்வின் செல்வ ஜஸ்டஸ், காட்வின் சௌந்தர் ராஜ், சுனில், சி. ஸ்டீபன் ஆகியோர், திரு. அலோசியஸ் திருமதியாளர்கள் பிறீதா, ஜாக்குலின் ஆகியோர் பயிற்சியினை வழங்கினார்கள்.

* குட்டைக்காடு, செம்பருத்திவிளை, மருதங்கோடு, மூலச்சல் பங்கின் மறைக்கல்வி மாணவர்களுக்கு மறை அறிவில் சிறக்க என்ற சிந்தனையில் திரு.லியோ, திருமதி.பிறீத்தா ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

### திருவழிப்பாடு பணிக்குழு

* 09.09.2024 - மறைமாவட்ட ஆலய பணியாளர்களின் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. ஆலய பணியாளர்களின் மேன்மை என்ற சிந்தனையில் அருள்பணி. பெனிட்டோ அவர்கள் பயிற்சிகள் வழங்கினார்கள். 43 ஆலய பணியாளர்கள் பங்கேற்றனர்.

* 14.09.2014 - மாத்திரவிளை, 21.09.2024 - வேங்கோடு, காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் மறைவட்ட பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன. மறைவட்ட முதல்வர்கள், திருவழிபாட்டின் மேன்மை, வழிபாட்டு ஒழுங்குமுறைகள், திருவழிபாட்டு பணிகள் என்ற சிந்தனைகளில் அருள்பணியாளர்கள் ஆன்றூஸ், மனோகிம் சேவியர், சுனில் ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

### விவிலியம் பணிக்குழு

* 07.09.2024 - மாத்திரவிளை, 22.09.2024 - காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன. மறைவட்ட முதல்வர்கள், மறைவட்ட இயக்குநர்கள் உட்பட 33,35 என்ற எண்ணிக்கைகளில் உறுப்பினர்கள் பங்கேற்றார்கள்.

காரங்காடு மறைவட்டத்தில் விவிலிய பணிகள் என்ற சிந்தனையில் இயக்குநர் அருள்பணி. சுனில் அவர்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்கள். அருள்பணி. சுனில் அவர்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள்

* விவிலிய மாதத்தை முன்னிட்டு பங்கு மற்றும் கிளை பங்குகளில் விவிலிய சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. மேலும், பங்குகளில் விவிலிய பயிற்சிகள். விவிலிய கண்காட்சிகள் மற்றும் 29.09.2024 அன்று மறைமாவட்ட அனைத்து ஊர்களிலும் சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது.

## 02. குடும்பநலம் பணிக்குழு

* திருமண பயிற்சி பெற்றவர்கள் - 104
* திருமண தகவல் பதிவுசெய்தவர்கள் 26
* எல்லா ஞாயிறு கிழமைகளில் பெரமாங்குழி, இரண்டாவது ஞாயிறு கடையல், பூட்டேற்றி, மூன்றாவது ஞாயிறு செம்பருத்தி விளை ஆகிய பங்குகளில் குடும்பநல கூட்டங்கள் நடைபெற்றன.

## 03. சிறார் பணிக்குழு

* 07.09.2024 - வேங்கோடு, 29.09.2024 - மாத்திரவிளை மறைவட்ட செயற்குழு கூட்டங்கள் நடைபெற்றன. மறைவட்ட இயக்குநர், நிர்வாகிகள், களப்பணியாளர்கள் உட்பட 12 நபர்கள், 10 நபர்கள் எனப் பங்கேற்றனர்.

* 22.09.2024 - திரித்துவபுரம், காரங்காடு மறைவட்டங்கள் மற்றும் 28.09.2024 - வேங்கோடு மறைவட்டத்தின் வேங்கோடு, காப்புக்காடு ஆகிய மண்டலங்கள் ஆகிய நிலைகளில் வழிகாட்டிகள் கூட்டங்கள் நடைபெற்றன. மறைவட்ட இயக்குநர்கள், மறைவட்ட முதன்மை அருள்பணியாளர்கள், இலவுவிளை, புல்லாணி பங்கு தந்தையர்கள், வழிகாட்டிகள், களப்பணியாளர் உட்பட 24,37,29 எனப் பங்கேற்றனர்.

- காரங்காடு மறைவட்டத்தில் புதுப்பித்தல் என்னும் சிந்தனையில் அருட்சகோதரி டயானா பிளாரன்ஸ் அவர்களால் பயிற்சி வழங்கபட்டது.

* 07.09.2024 - முளகுமூடு மறைவட்டத்தின் பள்ளியாடி மண்டல மாநாடு புனித பேதுரு ஆலய அரங்கம், சேரிக்கடையில் வைத்து நடைபெற்றது. இறைவேண்டலில் இறைதிரு உளம் காணும் சிறார்கள் என்னும் சிந்தனையில் அருள்பணி அனில் ஜோசப் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது.

* 17.09.2024 - மாத்திர விளை மறைவட்ட செயல்தள பயிற்சி புனித அந்தோணியார் ஆலய அரங்கம், பூட்டேற்றியில் வைத்து நடைபெற்றது. சவால்களை வென்றிடும் ஆளுமைமிக்க சிறார்களாக என்னும் சிந்தனையில் அருள்பணி. பிறைட் சிங் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது.

* 01.09.2024 - சுங்கான்கடை பங்கில் களப்பணியாளர்கள் செல்வி. அஜிதா ரூபி, திருமதி. சுஜா ஆகியோரால் சவால்களை வென்றிடும் ஆளுமைமிக்க சிறார்களாக என்னும் சிந்தனையில் பயிற்சி வழங்கப்பட்டது. பங்கு தந்தை, சிறார்கள், வழிகாட்டிகள் உட்பட 31 பேர் பங்கேற்றனர்.

* சந்திப்புகள்: குழுக்கள் - 31, வழிகாட்டிகள்-31, பங்கு பணியாளர்கள் -25

## 04. இளைஞர் பணிக்குழு

### இளைஞர்

* 22.09.2024 - மறைமாவட்ட பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. 20 பேர் பங்கேற்றனர். இயக்க உறுப்பினர்களின் பணியும் கடமையும் என்ற தலைப்பில் திரு. ஜாண் இளங்கோ கருத்துரை வழங்கினார்கள். ஆண்டுத்திட்டமிடல் நடைபெற்றது.

* 01.09.2024 - புத்தன்கடை, 08.09.2024 - மாத்திரவிளை, முளகுமூடு, திரித்துவபுரம், 09.09.2024 - காரங்காடு (இணைய வழி) 28.09.2024 - திரித்துவபுரம் (இணையவழி) ஆகிய மறைவட்டங்களில் செயற்குழு கூட்டங்கள் நடைபெற்றன. எழுத்தாளர் பயிற்சி, செயற்குழு உறுப்பினர்களின் பணியும் கடமையும், பொதுக்குழு திட்டமிடல் என்ற சிந்தனைகளில் கருத்துப் பகிர்வுகள் நடைபெற்றன.

* 08.09.2024 - திரித்துவபுரம், 15.09.2024 - மாத்திரவிளை, காரங்காடு, முளகுமூடு, புத்தன்கடை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன. விளையாட்டு வீராங்களை வினோஷ் போகத், பாலின சமத்துவம், பெண் குழந்தைகள் சந்திக்கும் சவால்கள், தலைமைப்பண்பு, மனிதனாக இரு என்ற சிந்தனைகளில் செல்வி. லாவண்யா, அருள்பணி. கால்வின், திருமதி. மோனிஷா, திரு. மோனிஷ், திருமிகு மனோஜ் ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

* 15.09.2024 - வேங்கோடு மறைவட்ட அளவில் பெண்களுக்கான உடல் உளநல ஆலோசனை முகாம் நடைபெற்றது. Dr. L. ஏஞ்சலின் ஆஷா பயிற்சியளித்தார்கள்.

* 07.09.2024 - மறைவட்ட பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. தலைமைத்துவம் என்ற தலைப்பில் அருள்பணி. எடிசன் கருத்துரை

வழங்கினார்கள்.

* 14.09.2024 - வேங்கோடு, காரங்காடு(இணையவழி), 15.09.2024 - புத்தன்கடை, மாத்திரவிளை, 29.09.2024 – முளகுமூடு ஆகிய மறைவட்டங்களில் செயற்குழு கூட்டங்கள் நடைபெற்றன. பயிற்சி, களப்பணி, பொதுக்குழு, எழுத்தாளர் ஆகிய சிந்தனைகளில் திட்டமிடல்கள் நடைபெற்றன.

* 15,09,2024 - திரித்துவபுரம், மாத்திரவிளை, முளகுமூடு, புத்தன்கடை, காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன. மரியா பெண்களின் முன்மாதிரி, பாலின சமத்துவம், இயக்க நோக்கம், தன்னை அறிதல், பெண் குழந்தைகள் சந்திக்கும் சவால்கள் ஆகிய சிந்தனைகளில் அருள்பணியாளர்கள் அஜின், கால்வின், அலக்ஸ், ஸ்டார்லின் ஆகியோரும், திரு. ஜோசப் ராஜ் அவர்களும் பயிற்சிகள் வழங்கினார்கள்.

* கையெழுத்து பிரதியை செந்தறை கிளை மாணவர் சந்திக்கும் சவால்கள் என்ற தலைப்பில் வெளியிட்டனர்.

* 22.09.2024 - போங்கிங்காலை, மாத்திரவிளை பங்குகளில் கிளை பயிற்சிகள் நடைபெற்றன. இயக்கம் இயக்க நோக்கம், சுய விழிப்புணர்வு பணி ஆகிய சிந்தனைகளில் பயிற்சிகள் நடைபெற்றன்.

## இளைஞர், இ.கி.மா/இ.மா இணைந்த செயல்பாடுகள்

* செப்படம்பர் 08, பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு கருத்தமர்வு தயாரித்து அனைத்து இ.கி.மா, இளைஞர் இயக்க கிளைகளுக்கும் அனுப்பப்பட்டது. இயக்க கூட்டத்தில் கருத்துப்பகிர்வும் உறுதிமொழியேற்பும் நடைபெற்றது.

* 25.09.2024 - பணிக்குழு அலுவலகம், திரித்துவபுரத்தில் நடைபெற்றது. 5 பேர் பங்கேற்றனர். செப்டம்பர் மாத இதழ் திறனாய்வும், அக்டோபர் இதழுக்கான திட்டமிடலும் நடைபெற்றது.

* 05.09.2024 - இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநர்கள் இணைந்த கூட்டம் நடைபெற்றது. 10 பேர் பங்கேற்றனர். பணி திறனாய்வு நடைபெற்றது.

## 05. பெண்கள் பணிக்குழு

* 04.09.2024 - புத்தன்கடை, 11.09.2024 - திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன.

* 18.09.2024 - வேங்கோடு மறைவட்ட மாநாடு நடைபெற்றது. 92 நபர்கள் பங்கேற்றனர். “பெண்ணே உன் வலிமையை அறிவாய்” என்ற சிந்தனையில் திருமதி. கிளாடிஸ் லில்லி அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது.

* 21.09.2024 - முளகுமூடு, 25.09.2024 - மாத்திரவிளை, 28.09.2024 – காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் பயிற்சிகள் நடைபெற்றன. திருத்தி அமைக்கப்பட்ட குற்றவியல் சட்டங்கள் குறித்த தெளிவுகள் என்ற சிந்தனையில் வழக்கறிஞர்கள் ஜோஸ்பின், சுஜா ஜாஸ்மின் ஆகியோர் பயிற்சிகளன் வழங்கினார்கள்.

* 14.09.2024 - காரங்காடு மறைவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. 10 நபர்கள் பங்கேற்றனர்.

* 13.09.2024 - கூட்டுக்குழு சார்பாக நடைபெற்ற பயிற்சியல் மறைமாவட்ட அளவில் 45 நபர்கள் பங்கேற்றனர். “குற்றவியல் சட்ட திருத்தம்” என்ற சிந்தனையில் வழக்கறிஞர் மரிய ஸ்டீபன் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது.

* 18.09.2024 முதல் 22.09.2024 வரை ஆகிய ஐந்து நாட்கள் ஊடக கல்வி என்ற சிந்தனையில் மாநில அளவில் நடைபெற்ற பயிற்சியில் நம் மறைமாவட்டத்திலிருந்து இரண்டு நபர்கள் பங்கேற்றனர்.

* 28,29.09.2024 ஆகிய இரண்டு நாட்கள் திருச்சியில் நடைபெற்ற கருத்தாளர் பயிற்சியில் மறைமாவட்ட செயலர் திருமதி. மேரி ஏஞ்சல் ரீத் பங்கேற்றார்கள்.

* 21.09.2024 முதல் 25.09.2024 ஆகிய தினங்களில் ஒடிசாவில் நடைபெற்ற தேசிய அளவிலான திட்டமிடல் மாநாட்டில் திருமதி. சுஜா மற்றும் திருமதி. சுஜா ஜாஸ்மின் ஆகியோர் பங்கேற்றனர்..

06. அன்பியம் பணிக்குழு

* 27.09.2024 - பணிக்குழு அலுவலகத்தில் வைத்து மறைமாவட்ட

நிர்வாகிகள் மற்றும் களப்பணியாளர்கள் இணைந்த கூட்டம் நடைபெற்றது. இதில் மாநாட்டு பணிகள் திட்டமிடப்பட்டது.

* 02.09.2024 - மாத்திரவிளை, 21.09.2024 - காரங்காடு, 22.09.2024 - திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் செயற்குழு கூட்டங்கள் நடைபெற்றன.

* 09.09.2024 - மாத்திரவிளை, 11,19.09.2024 ஆகிய நாட்கள் புத்தன்கடை ஆகிய மறைவட்டங்களில் நிர்வாகிகள் கூட்டங்கள் நடைபெற்றன.

* 07.09.2024 - முளகுமூடு, 21.09.2024 - காரங்காடு, புத்தன்கடை, 22.09.2024 - திரித்துவபுரம், வேங்கோடு, 28.09.2024 - மாத்திரவிளை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன.

முளகுமூடு மறைவட்டத்தில் மறைவட்ட இயக்குநர் அருட்பணி. பெஞ்சமின் அவர்கள் தலைமையில் பொதுக்குழு உறுப்பினர்கள் களப்பணியாளர்கள் இணைந்து பிலாங்காலை எம்மாவூஸ் மனநலம் குன்றியோர் காப்பகம் சந்தித்து அவர்களோடு உரையாடினர், மற்றும் ரூ. 90,000/- மதிப்பில் உதவிகள் வழங்கினர்.

காரங்காடு மறைவட்டத்தில் 16.11.2024 - மறைவட்ட மாநாடு நடத்த தீர்மானிக்கப்பட்டது.

புத்தன்கடை மறைவட்டத்தில் சுற்றலா மற்றும் பொதுக்குழு கூட்டம் இயக்குநர் அருட்பணி ஜீஸ் ரைமண்ட் தலைமையில், மாம்பழத்துறையாறில் நடைபெற்றது.

திரித்துவபுர மறைவட்டத்தில் திரு லூயின்டன் அவர்களால் “இயற்கை உணவு மற்றும் இயற்கை உரம் தயாரிப்பு” என்னும் சிந்தனையில் பயிற்சி வழங்கப்பட்டது.

மாத்திரவிளை மறைவட்டத்தில் அருட்பணி பிளாரன்ஸ் அவர்கள் “யூபிலி ஆண்டு” என்ற சிந்தனையில் பயிற்சி வழங்கினார்கள்.

* 23.09.2024 அன்று தூய பவுல் இறையியல் கல்லூரி குருத்துவ மாணவர்கள் இணைந்து பிலாவிளை பங்கின் 10 அன்பியங்களை சந்தித்து, அன்பிய கள அனுபவங்கள் பெற்றார்கள்.

* கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக மருத்துவ செலவிற்காக பங்கு, ஒருங்கிணையம் சார்பாக ரூ. 4,27,675.00 வழங்கப்பட்டது.

07. நற்செய்தி அறிவிப்பு பணிக்குழு

* மாதத்தின் முதல் வெள்ளி வெட்டுவெந்தி திருத்தலம், இரண்டவாது வெள்ளி பாரதப்பள்ளி மூன்றாவது வெள்ளி பரக்குன்று, இருதயபுரம் ஆகிய பங்குகளிலும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் திக்கணங்கோடு, லூர்து அன்னை தியான இல்லத்திலும் நற்செய்தி கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், நான்காவது சனி தூய யூதா ததேயு ஆலயம், சுவாமியார்மடத்தில் பரிந்துரை செபமும் நடத்தப்பட்டது.

* 29.09.2024 - செம்மாங்காலை, 30.09.2024 - மணலி (சூழால்), பாலப்பள்ளி (மணலி) ஆகிய பங்குகளில் நற்செய்தி கூட்டங்கள் நடைபெற்றன.

* 06,07,08.09.2024 ஆகிய மூன்று நாட்கள் திக்கணங்கோடு, தியான இல்லத்தில் மாதா பிறப்பு விழாவை நற்செய்தி கூட்டமாக சிறப்பிக்கப்பட்டது.

* 06.07.09.2024 ஆகிய இரண்டு நாட்கள் பரக்குன்று பங்கில் உள்ள கரைக்காடு, தூய மரியன்னை சிற்றாலயத்திலும், 24,25,26.09.2024 ஆகிய மூன்று நாட்கள் பாக்கியபுரம் பங்கிலும் நற்செய்தி கூட்டங்கள் நடைப்பட்டன.

* 15.09.2024 - மறைமாவட்ட செயற்குழு கூட்டம் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

* இல்லச் சந்திப்பு - 115, மருத்துவமனைகள் - 10

08. தொழிலாளர் பணிக்குழு

* 01.09.2024 - முளகுமூடு, மாத்திரவிளை, 22.09.2024 - காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் மறைவட்ட பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன.

* 08.09.2024 - மறைமாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

* 15.09.2024 - மறைமாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

* 22.09.2024 - மறைமாவட்ட பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

மறைமாவட்ட பணிக்குழு செயலர் அருள்பணி. சுஜின் அவர்கள் அறிமுக உரை வழங்கினார்கள். வழக்கறிஞர் திரு. ஷாஜின் ராஜ் அவர்களால் தலைமைத்துவ பண்புகள் என்ற சிந்தனையில் பயிற்சி வழங்கப்பட்டது.

09. சமூகத்தொடர்பு பணிக்குழு

* 08.09.2024 - மாதா தொலைக்காட்சியில் ஞாயிற்றுக்கிழமைக்காக தூய சவேரியார் ஆலயம், செந்தறையில் தமிழ் திருப்பலியும் ஒளிப்பதிவுச் செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டது. மேலும், 21.09.2024 ஆரோக்கிய அன்னை ஆலயம், பிள்ளவிளையின் நாள் திருப்பலியும் ஒளிப்பதிவுச் செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டது.

* 13.09.2024 - மறைமாவட்ட இணையதளமானது, புனித சவேரியார் பொறியியல் கல்லூரி மாணவர்களின் முதலாம் ஆண்டு தொடக்க விழாவில், குருகுல முதல்வர் பேரருள்பணி. சேவியர் பெனடிக்ட் அவர்களால் பொதுப்பயன்பாட்டுக்கென புதுப்பிக்கப்பட்டுத் தொடங்கி வைக்கப்பட்டது.

* 14.09.2024 - குழித்துறை மறைமாவட்ட வரலாறை தயாரித்து, நமது மறைமாவட்ட மேதகு ஆயர் ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

* 07.09.2024 - அருட்பணி. ஜேம்ஸ் தொம்பர் அவர்களின் 100-வது பிறந்த நாள் கொண்டாட்டத்தை ஒளிபரப்பட்டது. மேலும், செப்டம்பர் மாதம் முழுவதும் தினம் அருளுரைகளை அருட்பணியாளர்கள் அஜின், டேனியேல் ஆபிரகாம், பிளாரன்ஸ் ஆகியோர் வழியாக வழங்கினார்கள்.

* 22.09.2024 - மறைமாவட்ட மறைக்கல்வி ஆசிரியர் பயிற்சியில் ஊடக வழி மறைக்கல்வி என்ற மையக்கருவில் பயிற்சியானது. மறைமாவட்ட சமூகத்தொடர்பு பணிக்குழு செயலர் அருட்பணி. சுனில் அவர்களால் அளிக்கப்பட்டது.

* செப்டம்பர் மாதம் முழுவதும் தினம் அருளுரைகளை அருட்பணி. அஜின், அருட்பணி. டேனியேல் ஆபிரகாம், அருட்பணி. பிளாரன்ஸ் ஆகியோர் வழங்கினார்கள்.

10. தலித் பணிக்குழு

* 27.09.2024 - மறைமாவட்ட பொதுக்குழு கூட்டம் கட்டிடம் மார்த்தாண்டத்தில் வைத்து மறைமாவட்ட இயக்குநர் அருள்பணி. பெரடின் அனஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

* 15.09.2024 - காப்புக்காடு பங்கின் மறைக்கல்வி மாணவர்களை வயதிற்கேற்ற வகையில் மூன்று குழுக்களாகவும், பெற்றோரை ஒரு குழுவாகவும்கொண்டு, பணிக்குழுவிலிருந்து இரு பயிற்சியாளர்கள் வீதம் ஒவ்வொரு குழுவிற்க்கும் குற்றமில்லா குமரி என்ற சிந்தனையில் பயிற்சி வழங்கினார்கள்.

* 07,14,21.09.2024 ஆகிய மூன்று சனிக்கிழமைகளிலும் குழித்துறை ஆண்கள் கிளை சிறை மற்றும் பெண்கள் கிளை சிறை இல்லவாசிகளை இருவர் வீதம் சென்றுச் சந்தித்து உரையாடி ஆற்றுப்படுத்தினர்.

12. பொதுநிலையினர் பணிக்குழு

* 06,13,27.09.2024 - ஆகிய நாட்களில் நிர்வாக குழு கூட்டங்கள் நடைபெற்றன.

* 14.09.2024 - மறைமாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

* 23.09.2024 - திருத்தூது கழக ஒருங்கிணைப்பு ஊக்குவித்தல் குழு கூட்டம் நடைபெற்றது.

* 24.09.2024 - மேய்ப்பு பணி தேர்தல் குழு கூட்டம் நடைபெற்றது.

* தேர்தல் முன்தயாரிப்பு ஐந்து ஊர்களிலும், தேர்தல் விதிமுறைகள் விளக்குதல் மூன்று ஊர்களிலும், அன்பிய உறுப்பினர் தேர்தல் ஐந்து ஊர்களிலும், திருத்தூது உறுப்பினர் தேர்தல் ஐந்து ஊர்களிலும், நிர்வாகிகள் தேர்தல் ஆறு ஊர்களிலும் பணிகளாகச் செய்யப்பட்டது.

**சிந்தனைத் துளிகள்**

எறும்புகள் இணையும் பொழுது அவற்றின் மூளை ஒரே மூளையாக திரண்டுவிடுகின்றது என்கிறது அறிவியல். எறும்பு போல் சுறுசுறுப்பு என்பது உழைப்பை மட்டுமல்ல, ஒருங்கிணைந்து பணியாற்றுவதையும் உள்ளடக்கியது என்கிறது தத்துவயியல்.

# KIDSS - SHG

6-71, R.M.P. Building,
Azhagiyamandapam,
Mulagumoodu - 629 167.

சுயஉதவி குழு

- சுயஉதவி குழுக்களில் அதே பகுதிகளில் வசிக்கும் 18-60 வயதுக்குட்டபட்ட 12-20 வீட்டு பெண்கள் உறுப்பினராக உள்ளனர்.
- TNCED உடன் இணைந்து தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் சுயஉதவி குழுக்களை உருவாக்கின்றன.
- பல்வேறு திறன் பயிற்சித் திட்டங்களில் கீழ் தகுதியுடைய SHG உறுப்பினர்கள் பொருளாதர நடவடிக்கைகளை தொடங்க அல்லது சுய வேலைவாய்ப்பை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**Fr. F. Jose Prasanth**
**Director**

Date of Publishing : **19-10-2024**
Puthia Thedal Registered with Register og New Papers of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92/**2023 - 2025** Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office


The
**Only Research Institute**
in Kanyakumari District
Recognized by
**Anna University**

# St. XAVIER'S
CATHOLIC COLLEGE OF ENGINEERING
(Autonomous)
Chunkankadai, Nagercoil - 629003
Kanyakumari District, Tamil Nadu

## St. Xavier's Peculiarities...

- Anna University Recognized Research Institute
- Autonomous status
- 6 UG Programs Accredited by NBA
- Accredited with "A" Grade by NAAC
- Permanantly Affiliated with Anna University
- 430+ Genuine Placement offers Every Year with High Salary Packages
- 92% Graduation Rate & 80+ Faculties with Ph.D
- Active Centres of Excellence in Collaboration with Eminent Industries
- MSME Approved Business Incubation Centre
- 510 mpbs Wifi Enabled Campus



The only Engineering College in Tamil Nadu run by R.C. Diocese

UG Programs (ECE, EEE, Mech, Civil, CSE & IT)MBA & MCA Programs Permanently Affiliated | NAAC | UG Programs (ECE, EEE, Mech, Civil, CSE & IT) Accredited by NBA | 3.0 Star Ranking in IIC Rankings | Recognized under 2(f) & 112(B) of UGC Act. 1956 | MSME Approved Host Institute | INSTITUTION'S INNOVATION COUNCIL (Ministry of HRD Initiative) | HILTEK AI & ROBOTICS


Edited & Published by **Rev. Fr. R. Paul Richard Joseph** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at Delta Offset Printers, Vellicode